விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25

ஒலி 268 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 27 வியாழக்கிழமை (12.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## அமையவுள்ள புதிய அரசாங்கம்

# மனித உரிமைகளை மேம்படுத்த வேண்டும்

### பிரித்தானியா தெரிவிப்பு

(லண்டன்)

இலங்கையில் அமையவுள்ள புதிய அரசாங்கம் மனித உரிமைகளை மேம்படுத்த வேண்டும் என பிரித்தானியா தெரிவித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)



## 7 மாதங்களின் பின் கெஹலிய பிணையில் விடுதலை

(கொழும்பு)

சுமார் 7 மாதங்களின் பின்னர் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு 15

## 350 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

சிறு குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற 350 கைதிகள் இன்று செப்ரெம்பர் 12ஆம் திகதி கைதிகள் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் உள்ள சிறைகளில் இருந்து விடுவிக்கப்படவுள்ளதாகச் சிறைச்சாலைகள் ஆணையாளர்காமினி 15

## சிறுவர்களை தேர்தல் பிரசாரத்துக்கு பயன்படுத்தத் தடை

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்துக்கு சிறுவர்களைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பிரசாரத்திற்குக் குழந்தைகளைப் பயன்படுத்துவது தொடர்பான வீடியோக்கள் மற்றும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் சமீப காலமாகப் பரவி வருகிறது.

இது தொடர்பில் நேற்றுத் தேர்தல்கள் 15

## தென்னிலங்கை வேட்பாளர்கள் அரசியல் தீர்வை முன்வைக்கவில்லை

### பொது வேட்பாளர் அரியநேத்திரன்



(மட்டக்களப்பு)

அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்தாத வேட்பாளர்களாகவே தென்னிலங்கை வேட்பாளர்கள் செயற்பட்டு வருவதாகப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு பெரியபோரதீவுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங் 15

## ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளுக்கு தகுதி தராதரம் பாராது தண்டனை

### கர்தினாலிடம் சஜித் வாக்குறுதி



(கொழும்பு)

ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகளுக்கு தகுதி தராதரம் பாராது தண்டனை வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் வாக்குறுதியளித்தார். 15

## எதிர்வரும் 18ஆம் திகதி வைத்திய அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் எதிர்வரும் 18ஆம் திகதி நாடளாவிய ரீதியில் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தினை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக சங்கத்தின் செயலாளர் வைத்தியர் 15

## வவுனியாவில் பேருந்து நடத்துநர் மீது தாக்குதல்

(வவுனியா)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் அரச பேருந்து நடத்துநர் மீது தாக்குதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழில் இருந்து அக்கரைப்பற்று 16

## அர்ச்சுனாவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்குக

### சாவகச்சேரி நீதவான் உத்தரவு

(சாவகச்சேரி)

மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக 2 வாரங்களில் குற்றப்பத்திரிகையைச் சமர்ப்பிக்குமாறு சாவகச்சேரி நீதவான் சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகராக மருத்துவர் அர்ச்சுனா செயற்பட்ட சமயத்தில், அர்ச்சுனா பேஸ்புக் நேரலையில் பரப்பிய அவதூறுகள் தொடர்பான 15

## கொள்கை அரசியலை ஜே.வி.பி முன்னெடுக்கும்

### ஜனாதிபதி வேட்பாளர் அநுர



(கேகாலை)

கொள்கை ரீதியிலான அரசியலை ஜே.வி.பி முன்னெடுக்கும் என அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 1ம் ஆண்டு நினைவலைகள் 10ம் ஆண்டு நினைவலைகள்





அன்னை மடியில் 23.08.1943 அமரர் இறைவனடியில் 25.08.2023

**திரு. கார்த்திகேசு உருத்திரசுந்தரம்**

திதி - ஆவணி வளர்பிறை நவமி

அன்னை மடியில் 02.03.1946 அமரர் இறைவனடியில் 29.08.2014

**திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்**

திதி - ஆவணி சதுர்த்தி

அம்மா! அப்பா!

பத்து ஆண்டுகளாய் நாம்
பாரினில் பரி தவித்து
தாயன்பை தொலைத்தே நிற்க
ஆறுதலாய் எமக் கருகில்
தாயு மானவ னாகி
அரவணைத் தேகி நின்ற
தந்தையும் எமை விட்டேகி
வருடம் ஒன்றாகி விட்டதே
தேவி தேவி என்றே
மூச்சுக்கு ஒரு தரம்
அழைத்த தன் துணையை
தன் அருகில் அழைத்து
முருகனடியில் ஆனந்தம் அடைந்து
என்றுமே எமை ஆசீர்வதியுங்கள்

புலம் வீதி, கைதடி மேற்கு,
கைதடி.

(333)

குடும்பத்தினர்

# மனித உரிமை...

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், யுத்த கால மீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு பொறுப்புக்கூறல் எதுவும் இல்லை என ஜெனீவாவில் உள்ள பிரித்தானிய தூதரகம் கூறியுள்ளது.

"இலங்கையில் காணாமல் போன ஆயிரக்கணக்கான மக்கள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை, இது அவர்களின் குடும்பங்களுக்கு தொடர்ந்து வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட சமூகங்களின் ஆதரவைக் கொண்ட ஒரு விரிவான நிலைமாறுகால நீதி செயல்முறை முன்னெப்பதையும் விட மிகவும் அழுத்தமானது" என்று தூதரகம் குறிப்பிட்டுள்ளது.

கடத்தல்கள், தன்னிச்சையான தடுப்புக்காவல்கள், சித்திரவதைகள் மற்றும் வலுக்கட்டாயமாகக் காணாமல் போனோர் பற்றிய அனைத்து அறிக்கைகள் உட்பட, மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR) அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்ட மீறல்கள் குறித்து சுயாதீன விசாரணைக்கு பிரித்தானியா அழைப்பு விடுத்துள்ளது.

"அனைத்து இலங்கையர்களின் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்கள் மதிக்கப்பட வேண்டும். சிவில் சமூகம், பாதிக்கப்பட்ட சமூகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் துன்புறுத்தல்களால் நாங்கள் கவலையடைகிறோம்.

இது தேசிய நல்லிணக்கம் மற்றும் எதிர்காலத்தில் அமைதியான சமூகத்தை கட்டியெழுப்புவதில் அவர்களின் முக்கிய பங்கைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது," என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களைத் தொடர்ந்து, நம்பிக்கையை கட்டியெழுப்புவது மற்றும் நிலைமாறுகால நீதி செயல்முறைகள் உள்ளிட்ட மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிக்கும் என பிரித்தானியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

"இவை பக்கச்சார்பற்ற, சுதந்திரமான, வெளிப்படையான மற்றும் அர்த்தமுள்ள பொறுப்புணர்வை வழங்க வேண்டும்" என்று பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

இந்த சவால்களை எதிர்கொள்ள இலங்கைக்கு ஆதரவளிக்க தயாராக இருப்பதாகவும் பிரித்தானியா மேலும் கூறியுள்ளது. (ம-7)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 - 10 - 1948



மறைவு 09 - 09 - 2024

## நாகலிங்கம் செல்வராணி

யாழ்ப்பாணம் கரணவாய் தூதாவளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் செல்வராணி அவர்கள் 09.09.2024 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சுந்தரம் தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்துரை - பாறுவதி தம்பதிகளின் மருமகளும் நாகலிங்கம்(லிங்கம்ஸ் மணப்பந்தல்) அவர்களின் ஆருயிர் மனைவியும் மதிமாறன்(நோர்வே), நளாயினி(கனடா), மதீஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் பிறேமலீலா(நோர்வே), மகாலிங்கம்(கனடா), சுபாஜினி(கனடா) ஆகியோரின் மாமியாரும் சாருசன், பதுசன், ஹரினி(நோர்வே), சுகந்தன், நிந்துசன், அனோசன், ஆதீஸ், தனோஜ், ஜாதவ்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிதம்பரப்பிள்ளை(அமரர்), சிவராஜா, யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சந்தணம், சிவபாதசுந்தரம்(அவுஸ்திரேலியா), அழகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.09.2024 இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
நாகலிங்கம் (கணவர்)
077 600 8223

(C-1162)

சிரேஷ்ட சட்டத்தரணி
வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு
(அருள் கல்வி வட்டம்) G.C.E(O/L) க.பொ.த(சா/த)

## முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2024

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 14.09.2024 (சனி) | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் | மு.ப 8.00<br>பி.ப 2.00 |
| 15.09.2024 (ஞாயிறு) | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் | மு.ப 8.00<br>பி.ப 2.00 |
| 16.09.2024 (திங்கள்) | ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபம் (முல்லைத்தீவு) | மு.ப 8.00<br>பி.ப 2.00 |
| 17.09.2024 (செவ்வாய்) | நகரசபை மண்டபம் (மன்னார்) | மு.ப 8.00<br>பி.ப 2.00 |

Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
G.C.E (O/L) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

"அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்"

குறிப்பு:
மாணவர்கள் சீருடையுடனும் பொறுப்பாசிரியருடனும் வருகை தர வேண்டும்.

(C-1167)

**செயலமர்வின் அமைப்பாளர்கள்**

1) தலைவர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் -இலங்கை திரு.வே.தேவசேனாதிபதி (சிரேஷ்ட சட்டத்தரணி) 077 1133 400

2) பொதுச்செயலாளர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் - இலங்கை திரு.கந்தசாமி சக்திதரன் (மாகாண இணைப்பாளர் மாகாண தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி மாங்குளம்) 077 070 3360

(3) திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) 077 3850 841

இணை அனுசரணை கல்விக் காருணியன்
**ESP நாகரட்ணம் (கஜமுகன் ஹாட்வெயர்)**
[illegible] வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2833

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ஆரம்பப் பொது வழங்கல் (IPO) நாளை ஆரம்பம் !

**1,379,310,400** வரையான புதிய சாதாரண வாக்குரிமைப் பங்குகளை, ஒரு பங்கின் விலை ரூபா **14.50** வீதம் மொத்தமாக ரூபா **20,000,000,800/-** வரையான நிதியை திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து அல்லது **www.ltl.lk/ipo** ஊடாக தகவல் தொகுப்பை (Prospectus) பதிவிறக்கம் செய்து மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது வழங்கலுக்கான கூட்டு மேலாளர்கள்

NDB Investment Bank

CT CLSA Commitment. Trust. Continuity

LTL HOLDINGS LIMITED

(C-2422)

இலங்கையின் மாபெரும் ஆரம்பப் பொது வழங்கல் (IPO) - 2024 செப்டம்பர் 13 ஆரம்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# செபக் டாக்ரோ உலக சம்பியன்ஷிப்பில் இலங்கைக்கு 5 வெண்கலப் பதக்கங்கள்



தாய்லாந்தில் நடைபெற்ற 37 ஆவது செப்பக் டெக்ரோ உலக சம்பியன்ஷிப் கிங்ஸ் கிண்ண போட்டியில் பங்குபற்றிய இலங்கை 5 வெண்கலப் பதக்கங்களை வென்றெடுத்தது.

தாய்லாந்தின் நாக்ஹொான் ரட்சாசிமா விளையாட்டரங்கில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் கிங்ஸ் கிண்ண போட்டியில் 29 நாடுகளைச் சேர்ந்த சுமார் 750 விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டனர்.

செபக் டாக்ரோ என்பது கால்களைப் பயன்படுத்தி விளையாடப்படும் கிக் புட்போல் விளையாட்டாகும்.

இந்த விளையாட்டு தாய்லாந்தில் உதயமாகி, தென்கிழக்கு ஆசியா முழுவதும் பரவியதுடன் இப்போது மேற்கத்தேய நாடுகளில் கிக் வொலி போல் என அழைக்கப்படுகிறது.

கரப்பந்தாட்டத்தில் பின்பற்றப்படும் அனைத்து விதிகளும் இந்த விளையாட்டிற்கும் பொருந்தும் என இலங்கை செபக் டாக்ரோ சம்மேளனத் தலைவர் நிலாம் ஹலால்தீன் தெரிவித்தார்.

பெண்கள் பிரிவில் 3 வெண்கலப் பதக்கங்களையும் ஆண்கள் பிரிவில் 2 வெண்கலப் பதக்கங்களையும் இலங்கை வென்றெடுத்தது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 240 | 150-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 180 | 150-200 | 250 |
| தக்காளி | 200 | 240 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 300 | 240 | 150-200 | 180 |
| கோவா | 230 | 280 | 300 | 250 | 300 |
| கரட் | 300 | 280 | 300 | 250 | 300 |
| பூசணி | 80 | 60 | 100 | 60 | 80 |
| புடோல் | 60 | 120 | 80 | 80-100 | 160 |
| வாழைக்காய் | 250 | 240 | 240 | 200-220 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 100-140 | 300 |
| பெரிய வெங்காயம் | 300 | 220 | 250 | 280 | 240 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 60 | 80 | 100 | 70-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 240 | 130 | 200 |
| பயற்றங்காய் | 150 | 140 | 100 | 100 | 150 |
| லீக்ஸ் | 250 | 300 | 320 | 250 | 300 |
| பீற்றூட் | 80 | 80 | 100 | 70-90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 450 | 450 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 200 | 150-220 | 160 |
| போஞ்சி | 250 | 300 | 350 | 300 | 400 |
| கத்தரி தம்புள்ள | 150 | 150 | -- | -- | 240 |
| கீரை - 1 பிடி | 130 | 140 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 300 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 140 | 120 | 80-110 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | -- | 650 | 800 |
| வெங்காயப்பூ | 350 | 250 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 120 | 90 | 60 |
| வல்லாரை | 60 | 30 | 70 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 70 | 50 | 90 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3218

### சுசில்

அண்ணா சாதா கோழி சாதா முட்டை போடுது



அப்போ நெருப்பு கோழி அவிச்ச முட்டை போடுமா?

### ரதித்தா



இரண்டு விடயத்தை நன்றாக புரிந்து கொள்ளுங்கள்
1. மனநோயுடன் போராட வேண்டும் பயப்படக்கூடாது
2. மனைவியிடம் பயப்பட வேண்டும் போராடக்கூடாது.
காரணம் இந்த இரண்டுக்கும் மருந்து இதுவரை யாரும் கண்டுபிடிக்கவில்லை

### லோகேஷ்

பெண்களைப் புரிந்து கொள்வது எப்படி நூல் வெளியிடப்பட்டுள்ளது



இது தான் அந்த நூல்

### பிறேமினி

அப்பா: டேய் நீதான் இங்கிலிஸ் சீரியல் எல்லாம் பார்க்கிறியே பேங்கில இருந்து பேசுறாங்கள் என்ன என்று கேளு




தேவையா வெட்டி பந்தா

### ராகவ்

எப்படி ஜூம் பண்ணி பார்த்தும் ஒரு மண்ணும் தெரியல



### சஞ்சீவன்

கோபத்தை அடக்க சிறந்த வழிகளில் முக்கியமான ஒன்று



திருமணம் செய்வது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார பிரச்சினைக்கு வேட்பாளர்களிடம் தீர்வில்லை

## சுட்டிக்காட்டிய பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர்

**(கொழும்பு) நாடு எதிர்நோக்கி வரும் பொருளாதாரப் பிரச்சினைக்கு எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரிடமும் தீர்வு இல்லை என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞான மற்றும் புள்ளிவிபரவியல் கற்கைப் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.**

நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்பக்கூடிய வகையிலான கொள்கைகளை எந்த ஒரு ஜனாதிபதி வேட்பாளரும் சமர்ப்பிக்கவில்லை.

கொள்கை பிரகடனங்களில் பொருளாதார சமூக மற்றும் அரசியல் கட்டமைப்பு தொடர்பிலான பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 5 ஆண்டு காலத்தில் நாட்டில் நிலவக்கூடிய பொருளாதார நெருக்கடி நிலைமைகளை வெற்றி கொள்வதற்கான வழிமுறைகளை எந்த ஒரு வேட்பாளரும் முன்வைக்கவில்லை.

அவ்வாறு ஓர் தீர்வுத் திட்டத்தை முன்வைக்காமை கவலை அளிப்பதாக பேராசிரியர் அத்துக்கோரள குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் அரசியல் கட்சிகளினால் முன்மொழியப்பட்டுள்ள யோசனைகள் எந்த வகையிலும் ஏற்புடையதல்ல என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை 10 வீதமாக அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# புலமைப் பரிசில் பரீட்சை

## வகுப்புக்கள், கருத்தரங்குகளுக்குத் தடை

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான அனைத்துப் பயிற்சி வகுப்புகள், விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் தடைசெய்யப்படுவதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுவரொட்டிகள், பதாகைகள், பிரசுரங்களை வெளியிடுவது அல்லது பரீட்சை வினாக்களில் வினாக்கள் வழங்கப்படும் அல்லது அது போன்ற கேள்விகள் வழங்கப்படும் போன்றவற்றை வைத்திருப்பதும் நேற்று நள்ளிரவுடன் தடை செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். இதேவேளை 2024 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புல மைப்பரிசில் பரீட்சை செப்ரெம் பர் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையை பாராட்டிய சீனா

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் மேற்கொண்ட முயற்சிகளை சீனா பாராட்டியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சமீபத்திய அமர்வின் போதே சீனா இவ்வாறு பாராட்டியுள்ளது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் சீனப் பிரதிநிதி லீ சியாவோமெய் இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை விமர்சித்துள்ளார்.

இந்தத் தீர்மானம், சாட்சியங்கள் சேகரிப்பு மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை கோருவதுடன் இது இலங்கையின் முயற்சிகள் மற்றும் சாதனைகளைப் புறக்கணிக்கின்றது என்ற வாதத்தை சீனப் பிரதிநிதி முன்வைத்துள்ளார். மேலும் இலங்கையின் உண்மை மற்றும் நல்லிணக்கக் குழுவை ஸ்தாபித்தல், மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் ஒத்துழைப்பு, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் பாதுகாப்பு, பொருளாதார மீட்பு முயற்சிகள் மற்றும் வாழ்க்கைத்தர மேம்பாடுகளை சீனப் பிரதிநிதி குறிப்பிட்டுள்ளதுடன், இலங்கைக்கு சீனாவின் உறுதியான ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, இலங்கையின் சுதந்திரமாகத் தெரிவு செய்யப்பட்ட மனித உரிமைகள் அபிவிருத்திப் பாதைக்கு மதிப்பளிக்குமாறும் அரசியல் அழுத்தங்களை கைவிட்டு, உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை வழங்குமாறும் சீனப் பிரதிநிதி சர்வதேச நாடுகளை வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஆட்டோ- ஹயஸ் வல்லையில் விபத்து

(கரணவாய்)

வடமராட்சி வல்லைப் பகுதியில் ஆட்டோ- ஹயஸ் மோதி ஏற்பட்ட விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து வடமராட்சி நோக்கி சென்ற ஆட்டோவும் ஹயஸ்ூமே விபத்திற்குள்ளானது. இதில் சாரதி உட்பட இருவர் காயமடைந்துள்ளனர். (நி-60)



# நூலக தகவல்

## விஞ்ஞான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா ஆண்டில் பல்கலைக்கழக வித்தியானந்தன் நூலகத்தால் "அறிவு வலுவூட்டல்: உயர்ச்சியின் உந்துசக்திகளாக நூலகங்கள்" எனும் தலைப்பிலான நூலகத் தகவல் விஞ்ஞான கருத்தரங்கானது இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (நி)

# இராசிபலன்

12.09.2024
ஆவணி 27, வியாழக்கிழமை
நவமி முன்னிரவு 6.56 மணிவரை

மூலம் முன்னிரவு 6.27 மணிவரை
சுபநேரம் 7.33- 9.03 மணி வரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை
ஆவணி மூலம்

சந்திராஷ்டமம்- பரணி, கார்த்திகை

வளவன்

**மேஷம்** அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும், பொது வாழ்வில் கௌரவக் குறைவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** விருந்தினர்களின் சந்திப்பால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.

**கடகம்** பல நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**கன்னி** இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்** நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு.

**தனுசு** சோம்பலை விலக்குவது நல்லது, பயணங்களால் வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, சவால்களை சமார்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**மகரம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, சயனசுகக் குறைவான நாள்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** மற்றவர்கள் மத்தியில் உங்களில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.

பேசும் முன் கேளுங்கள், எழுதும் முன் யோசியுங்கள், செலவழிக்க முன் சம்பாதியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BID

## கேள்வி அறிவித்தல்

## சபை நிதி வேலைத்திட்டம்-2024

## கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி குறித்த வேலைத்திட்டங்களிற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2. **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை (DivPC)** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது:

4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட் டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தினையும் (CIDA Registration & Grade for Highway) கொண்டிருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி** 5 இல் காட்டப்பட்டுள்ளது.

5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி . (தொலைபேசி: 021 228 5761, தொலைநகல்: 021 228 5690, E-Mail:** kilinochchi1kps@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை **26.09.2024** ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** எனும் இடத்திலிருந்து **12.09.2024** ஆம் திகதியிலிருந்து **26.09.2024** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**3,500.00** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி கிளிநொச்சி** எனும் முகவரிக்கு **26.09.2024** திகதி மாலை **14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

8. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் 2024.09.19 ஆந் திகதி பி.ப 15.00 மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரு)மில்லியன் (With out Vat) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ருபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/KN/KPS/ 2024/PU-02 /C.W 04 | 1. இராமநாதபுரம் அண்ணா விளையாட்டுக்கழகம் தொடக்கம் வெற்றிப்பாதை சனசமூக நிலையம் வரை அழகாபுரி வித்தியாலய முன்வீதி நாகராசா கடை வரைவீதித்திருத்தம். 2. வட்டக்கச்சி சிவிக்சென்ரர் முதல் பத்து வீட்டுத்திட்ட சந்தி வரை வீதித்திருத்தம். 3. திருவையாறு மயான வீதித்திருத்தம். (கிரவல் வீதிகள்) | 4.375 | 90 நாட்கள் | C8 or C7 | 28.11.2024 | 45,000.00 | 26.12.2024 |
| NP/KN/KPS/ 2024/PU-02 /C.W 25 | 1. கிராம அலுவலக முன்வீதிப்பெட்டிப்பாலம் 2. பரந்தன் குமரபுரம் 09ஆம் வீதிப்பெட்டிப்பாலம். | 3.305 | 90 நாட்கள் | C8 or C7 | 28.11.2024 | 35,000.00 | 26.12.2024 |
| NP/KN/KPS/ 2024/PU-02 /C.W 26 | 1. கனகாம்பிகைக்குளம் கானான் ஆலய நாகபூசணி அம்மன் வீதித்திருத்தம்.(கிரவல் வீதி) 2. கோணாவில் மயானப்பாதை உட்புற வீதித் திருத்தம்.(கிரவல் வீதி) 3. வட்டக்கச்சி சுடலைச்சந்தி பெட்டிப்பாலம் அமைத்தல். 4. அக்கராயன் அண்ணா சிலை காட்டம்மன் பிரதான வீதி பெட்டிப்பாலம் அமைத்தல். | 4.736 | 90 நாட்கள் | C8 or C7 | 28.11.2024 | 50,000.00 | 26.12.2024 |
| NP/KN/KPS/ 2024/PU-02 /C.W 27 | 1. இரத்தினபுரம் வீதியின் கிளிநகருக்குரிய 01ஆம் குறுக்கு வீதி புனரமைப்பு.(கொங்கிறீற் வீதி) | 3.297 | 90 நாட்கள் | C8 or C7 | 28.11.2024 | 35,000.00 | 26.12.2024 |
| NP/KN/KPS/ 2024/PU-03 /C.W 03 | 1. Ice factory இல் இருந்து நாகேந்திரபுரம் வரையான வீதித்திருத்தம் (கிரவல் வீதி) | 2.542 | 90 நாட்கள் | C8 or C7 | 28.11.2024 | 30,000.00 | 26.12.2024 |

**2024.09.12**

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி**

(சி-1165)



சர்வதேச உலர் காலநிலை தொடர்பான மாநாடு யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் ஏற்பாட்டில் விவசாய பீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராஜா கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக இந்திய தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஈ.சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

குறித்த நிகழ்வில் ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள் விவசாயத்துறைசார்ந்தோர், போராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்: தேவானந்தன்)

# பேருந்தில் கசிப்பு கடத்த முற்பட்டவர் கைது

(கிளிநொச்சி )

தருமபுரம் பகுதியில் பேருந்தில் கசிப்பினைக் கடத்த முற்பட்ட சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தருமபுரம் பேருந்து தரிப்பு நிலையத்தில் நேற்றையதினம் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்த கசிப்பினை பேருந்தில் ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு செல்ல முற்பட்ட வேளை பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து 28 லீற்றர் கசிப்பும், கசிப்பு கொண்டு செல்வதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரையும் தடயப் பொருட்களையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள்தாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2024 ஆம் ஆண்டு இரண்டாம் அரையாண்டிற்கான அழகுக்கலை மற்றும் சிகையலங்கரிப்பவர் ஆகிய முழு நேர கற்கைநெறிகள் 02.09.2024 ஆம் திகதி பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகி உள்ளன.

இக்கற்கைநெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர்வரும் 18.09.2024 திகதிக்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம், இல.12 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் அல்லது பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி நிலையத்தில் மேற்கொள்ள முடியும். மேலதிக விபரங்களினை பெற்றுக்கொள்வதற்கு 021 222 7949, 071 031 8737, 077 613 9307 தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என அதன் பிரதிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (நி)

## வேலணை பிரதேச சபை
## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத கட்டாக்காலி பசுக்கன்று கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

இடம் :- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்
காலம் :- 13.09.2024 வெள்ளிக்கிழமை மு.ப.10.30

- ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தைச் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்
- பகிரங்க ஏலத்தில் சித்தியடைந்தோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச் செல்லல் வேண்டும்.

தொடர்புகளுக்கு:-
021 221 1506
12.09.2024

திரு.தி.தியாகச்சந்திரன்,
செயலாளர்,
பிரதேச சபை,
வேலணை.

(சி-1164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெல்க தமிழ்

சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!



X



எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.

(சி-014)

தமிழ்ப் பொது வேட்பாளர்

பா.அரியநேத்திரன்

தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு


## உரமானியப் பதிவுகள்

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குட்பட்ட தனங்கிளப்பு கமக்கார அமைப்பின் பதிவிலுள்ள நெற்செய்கையாளர்களுக்கான உரமானியப் பதிவுகள் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1.30 மணி வரை தனங்கிளப்பு பொது நோக்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ளவரும் செய்கையாளர்கள் 2024 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி சிட்டை,தேசிய அடையாள அட்டை, வங்கிப் புத்தகம் மற்றும் சம்மேளன சந்தா சிட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு கமக்கார அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-30)


# மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி. நீலாம்பிகை (SLTS-I, சங்கீதம்)
ஜெயக்குமார்



எமது பாடசாலையில் சங்கீத பாட ஆசிரியராகக் கடமையாற்றி இன்று 12.09.2024 வியாழக்கிழமை ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர் திருமதி. நீலாம்பிகை ஜெயக்குமார் அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations!

**சேவை விபரம்**

- யா/ கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலை
- யா/ வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாசாலை (22.03.1990- 28.02.2002)
- யா/வரணி மத்திய கல்லூரி (01.03.2002-06.02.2015)
- யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் (07.02.2015-11.09.2024)

(சி-1161)

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்.



# ஜனாதிபதித் தேர்தல்-2024



### தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரி

தேர்தலில் சிறிதுங்க ஜெயசூரியவுக்கு - ஆட்டோ சின்னத்தில் வாக்களிப்பதன் மூலம் உங்கள் எதிர்ப்பை பதிவு செய்யுங்கள். இனவாத கட்சிகளை புறக்கணியுங்கள்.

தேர்தலுக்கு பின்பும் எதிர்ப்பை காட்ட முன் வாருங்கள்.

'தேர்தல் காலங்களில் தென் பகுதியில் ஒரு விதமாகப் பேசுவது, வடக்கு கிழக்கில் வேறு விதமாக உரையாற்றுவது என்ற கபடத்தனம் அரசியல்வாதிகளிடம் நிறைந்திருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் 39 ஜனாதிபதி வேட்பாளர்களில் ஐக்கிய சோஷலிச கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய ஒரு உண்மையை பகிரங்கமாகக் கூறி உள்ளார். ஆம், இந்த நாட்டின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆள்வதாக இருக்க வேண்டும்.'

එක්සත් සමාජවාදී පක්ෂය
ஐக்கிய சோசலிச கட்சி
UNITED SOCIALIST PARTY



X

சோஷலிச கட்சியை தொடர்பு கொள்ள :
53/ 6, E. D. Dabare Mawatha,
Narahenpita, Colombo-05
unitedsocialists@gmail.com
0112504647


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இரட்டை கோபுர தாக்குதல் 23 ஆவது நினைவுதினம்



(வோஷிங்டன்)
உலகையே உலுக்கிய அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தாக்குதல் இடம் பெற்று நேற்றுடன் 23 வருடங்கள் ஆகின்றன.

உலகின் தூங்கா நகரம் என வர்ணிக்கப்படும் அமெ ரிக்காவின் நியூயோர்க் நக ரில், 2001 இதே திகதியில் காலை 8.46 மணியளவில் வானளவு உயரத்தில் இருக்கும் இரட்டை கோபு ரங்கள் மீது அமெரிக்க ஏர்லைன்ஸ் நிறுவனத் துக்குச் சொந்தமான பயணிகள் விமான மொன்று மோதியது.

81 பயணிகள் மற்றும் 11 பணியாளர்களுடன் வோஷிங் டனில் இருந்து லொஸ் ஏஞ்சலஸ் நகரத்துக்குப் பய ணிக்கவிருந்த விமானமே இவ்வாறு மோதியது.

எதிர்பாராத நேரத்தில் இடம்பெற்ற இவ் விபத்தி னால் அமெரிக்காவே அதிர்ந்து போய் இருந்த நிலையில் தொடர்ந்து 18 நிமிடங்கள் இடைவெளி யில் அதாவது காலை 9:03இற்கு மற்றொரு விமானம் இரட்டை கோபுரத் தின் தெற்கு கட்டடத்தின் மீது தாக்குதல் நடத்தியது.

இந்த விமானமும் அதே வோஷிங்டன் விமான நிலையத்தில் இருந்து 56 பயணிகள் மற்றும் 9 பணி யாளர்களுடன் புறப்பட்ட விமானமாகும்.

இந்தத் தாக்குதலை யடுத்து இரட்டை கோபுரக் கட்டடங்கள் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கின. நியூ யோர்க் நகரம் முழுவதும் கரும்புகை சூழ்ந்தது. கட்ட டங்கள் தெருக்களில் சரியத் தொடங்கின. ஆயிரக் கணக் கான மக்கள் கட்டட இடி பாடுகளுக்குள் சிக்கிக் கொண்டனர்.

நகரம் முழுவதும் அழு குரல் ஒலிக்க சில மணி நேர இடைவெளியில் அமெ ரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்ட கன் மீது அடுத்த தாக்குதல் இடம்பெற்றது. இத்தாக்கு தலினால் அமெரிக்கா மட்டு மல்ல. ஒட்டுமொத்த உலகமே உறைந்து போனது. இந் நிலையில் குறித்த தாக்குதலுக்கு அல் கொய்தா அமைப்பு பொறுப் பேற்றது.

இந்த நேரத்தில் 4 ஆவ தாக மற்றொரு விமானம் கடத்தப்பட்டிருந்தது கண்ட றியப்பட்டது. எந்த இடத்தில் தாக்குதல் நடத்தும் என எதிர்பார்க்கப்பட்ட நேரத்தில் பென்சில்வேனியா மாகா ணம் அருகே வெட்டவெளி யில் குறித்த விமானம் விழுந்து நொருங்கியது.

விமானத்திலிருந்த தீவிர வாதிகளுடன், அதில் வந்த பயணிகள் சண்டையிட்ட தன் காரணமாகவே விமா னம் வெட்ட வெளியில் விழுந்து நொறுங்கியது என விசாரணையில் தெரிய வந் ததாக அதிகாரிகள் தெரி வித்தனர். இந்த விமானம் தாக்கச் சென்ற இடம் எது என விடை என்பது இப் போது வரை மர்மமாகவே உள்ளது. இந்த ஒட்டு மொத்தத்தாக்குதலில் 19 பயங்கரவாதிகள் உட்பட மொத்தம் 2,996 பேர் உயிரிழந்தனர். இதில் இரட்டை கோபுரத்தில் ஏற்பட்ட தீயை அணைக்க சென்ற 300 தீயணைப்பு வீரர்களும் அடங்குவர் என் பது குறிப்பிடத்தக்கது. (நி)

## 15 ஆம் திகதி பூமியை தாக்கவுள்ள இராட்சத கோள்- நாசா எச்சரிக்கை



(வோஷிங்டன்)
பயங்கர வேகத்தில் பூமியை நோக்கி வரும் 2024 ON என்ற இராட்சத சிறுகோள், எதிர்வரும் 15 ஆம் திகதி பூமிக்கு அருகில் செல்ல உள்ளதாக நாசா எச்சரித்துள்ளது.

720 அடி விட்டம் கொண்ட இந்த ராட்சத சிறுகோள், இரண்டு கிரிக்கெட் மைதானங்களை விட பெரியதாக இருக்கும் எனத் தெரி விக்கப்பட்டு உள்ளது. இந்த பிரம்மாண்டமான விண்வெளிப் பாறை வரும் 15 ஆம் திகதி அன்று பூமிக்கு அருகில் செல்ல உள்ளது.

இருப்பினும், இந்த சிறுகோள் சுமார் 620,000 மைல்கள் அல் லது தோராயமாக 2.6 மடங்கு பாதுகாப்பான தூரத்தைப் பராமரிக் கும் என கூறப்பட்டுள்ளது. மேலும், இதன் 25,000 மைல் வேகமானது வானியலாளர்கள் மற்றும் விண்வெளி ஆர்வலர் களை ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

நாசாவின் பூமிக்கு அருகில் உள்ள பொருள் கண்காணிப்பு திட்டத்தால் முதலில் அடையாளம் காணப்பட்ட இந்த ராட்சத சிறு கோள் 2024 ON, அதன ஈர்க்கக்கூடிய அளவு மற்று விரைவான வேகம் காரணமாக கவனத்தை ஈர்த்துள்ளது.

கலிபோர்னியாவின் ப டேனாவில் உள்ள ஜெட் ப்ரோப ஷன் ஆய்வகம், மேம்பட்ட ரேடா மற்றும் ஆப்டிகல் தொலைநோக் கருவிகளைப் பயன்படுத்தி சிறு கோளைக் கண்காணித்து வரு கிறது. சிறுகோளின் அளவு, வ வம் மற்றும் கலவை பற்றி விரிவான பகுப்பாய்வுகள், ஏதே னும் சாத்தியமான அபாயங்களை மதிப்பிடுவதற்கும் உத்திகளை ஆராய்வதற்கும் நடத்தப்ப கின்றன.

சிறுகோள் வலிமையான வேகம் மற்றும் பெரிய அளவில் உள்ளபோதிலும், அது பூமியுடன் மோதுவதற்கான வாய்ப்பு குறை வாகவே உள்ளது. எனினும் நாசாவின் கிரகப் பாதுகாப் ஒருங்கிணைப்பு அலுவலகம் தொடர்ந்து விழிப்புடன் இருக் அறிவுறுத்தியுள்ளது. (நி

## யாகி சூறாவளியால் வியட்நாமில் உயிரிழப்பு 127 ஆக அதிகரிப்பு



(ஹனோய்)
வடமேற்கு பிலிப்பைன்ஸ் மற்றும் சீனாவைத் தாக்கிய யாகி சூறாவளிப் புயல் கடந்த சனிக்கிழமை வியட் நாமை மணித்தியாலத் திற்கு 149 கிலோ மீற்றர் வேகத்தில் தாக்கியிருந்தது.

வியட்நாமின் வடக்கு கடலோரப் பகுதி மாகா ணங்களான குவாங் நின், ஹைபாங் ஆகிய பகுதி களில் மணிக்கு 149 கி.மீ வேகத்துடன் புயல் கரையைக் கடந்தது. இத னால் பலத்த காற்றுடன் பல மணி நேரம் கனமழை பெய்தது.

புயல் காரணமாக கட லோரப் பகுதிகள் கடுமை யாக பாதிக்கப்பட்டதோடு, பலத்த காற்று வீசியதால் மரங்கள் வீதியில் சரிந்து வீழ்ந்தன. கனமழையால் சில இடங்களில் நிலச்ச ரிவும் ஏற்பட்டது. புயல் கார ணமாக விமான நிலை யங்கள் மூடப்பட்டன. நூற் றுக்கணக்கான விமானங் கள் இரத்து செய்யப்பட்டன. மீட்புப் பணிகளில் இரா ணுவம், பொலிஸார் மற் றும் மாநகராட்சி பணியா ளர்கள் ஈடுபட்டுள்ளனர்

இந்நிலையில், யாகி புயல் மற்றும் மழை தொடர்பான விபத்துகளில் சிக்கி 21 பேர் உயிரிழந்துள் ளனர் என்பதோடு 176 பேர் காயம் அடைந்துள்ளனர் என முதல் கட்ட தகவல் வெளியானது.

இந்நிலையில், தொடர்ந்து பெய்த மழையால் விபத்துக் களில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 127 ஆக அதிகரித்துள்ளது. 50 இற் கும் அதிகமானோரைக் காணவில்லை. நூற்றுக் கணக்கானோர் காயம டைந்தனர் என அந்நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள் ளது. வியட்நாம் நாட்டில் பல தசாப்தங்களாக இல்லாத வகையில் யாகி புயல் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நீதித்துறை சீர்திருத்த முயற்சிக
## மெக்சிக்கோ பாராளுமன்
## நுழைந்த ஆர்ப்பாட்டச்



(மெக்சிக்கோ)
மெக்சிக்கோவில் நீதித்துறை சீர்திருத்தம் குறித்து பாராளுமன் றம் ஆராய்ந்து கொண்டிருந்த வேளை உள்ளே நுழைந்த ஆர்ப் பாட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டுள்ளனர்.

மெக்சிக்கோ செனெட்டில் நீதித்துறை சீர்திருத்தம் குறித்து விவாதம் இடம்பெற்றுக்கொண்டி ருந்தவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் உள்ளே நுழைந்ததால் செனெட் உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக சபையின் அமர்வுகள் தற்காலி கமாக ஒத்திவைக்கப்பட்டன.

நீதித்துறை சீர்திருத்த சட்ட

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ள்ள
க்கை



# ரஷ்ய – உக்ரைன் போர்

# முடிவுக்கு கொண்டு வர இந்தியா தயார்!

## ஜேர்மனியில் ஜெய்சங்கர் தெரிவிப்பு



**(பெர்லின்)**

**ரஷ்ய-உக்ரைன் மோதல் போர்க்களத்தில் தீர்க்கப்படும் என நினைக்கவில்லை. ஒரு கட்டத்தில் பேச்சுவார்த்தை நடக்கும். பேச்சுவார்த்தை நடக்கும் போது ரஷ்யா மற்றும் உக்ரைன் அந்தப் பேச்சு வார்த்தையில் இருக்கவேண்டும்.உங்களுக்கு ஆலோசனைகள் தேவைப்பட்டால், நாங்கள் எப்போதும் அதை வழங்க தயாராக இருக்கிறோம் என இந்தியா தெரிவித்துள்ளது.**

ஜேர்மனியில் நடந்த வெளியுறவு அலுவலகத்தின் தூதர்கள் மாநாட்டில் மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் கலந்துகொண்டார். அப்போது ரஷ்யா-உக்ரைன் போர் குறித்து செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவித்தார்.

ரஷ்யா-உக்ரைன் இடையே 2 ஆண்டுக்கு மேலாக போர் நடைபெற்று வரும் நிலையில், இந்தப் போரை முடிவுக்கு கொண்டுவர அமைதிப் பேச்சு வார்த்தையில் இந்தியா, சீனா, பிரேசில் ஆகிய நாடுகள் மத்தியஸ்தர்களாக செயற்பட முடியும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.

இந்திய பிரதமர் மோடியின் ரஷ்யா, உக்ரைன் பயணத்துக்கு பிறகு புடின் இந்தக் கருத்தை தெரிவித்தார். இதே கருத்தை உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியும் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களுடனும் இந்தியாவுக்கும் பிரதமர் மோடிக்கும் நல்லுறவு இருக்கும் நிலையில், போரை முடிவுக்கு கொண்டுவர இந்தியாவின் முன் முயற்சியை உலகமே எதிர்பார்க்கிறது என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

---

சிகளுக்கு எதிர்ப்பு

# மன்றத்திற்குள் டக்காரர்கள்



மூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆளும் கட்சியான மொரேனாவிற்கு தேவையான வாக்குகள் கிடைத்திருந்த நிலையிலேயே ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் ஆளும்கட்சிக்கு ஆதரவை வெளியிட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மெக்சிக்கோவின் பதவி விலகும் ஜனாதிபதியின் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளிற்கு மாணவர்களும், நீதித் துறை ஊழியர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

நீதிபதிகளை தேர்ந்தெடுக்கும் முறையை அறிமுகப்படுத்தவுள்ள இந்த சீர்திருத்தத் திட்டத்தினால் நீதித்துறையின் சுதந்திரத்திற்கு பெரும் ஆபத்து ஏற்படும் என ஆய்வாளர்களும் விமர்சகர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

வாக்கெடுப்பை தவிர்ப்பதற்காக பாராளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் பகுதிக்குள் நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களை செவிமடுக்கின்றார்கள் இல்லை என தெரிவித்துள்ளனர்.

மெக்சிக்கோ கொடியையும் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளிற்கு எதிரான வாசகங்களையும் ஏந்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் நீதித்துறை வீழ்ச்சியடையாது என கோஷமிட்டுள்ளனர்.

எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களுடன் இணைந்துகொண்டுள்ளனர். (நி)

---

# அணு உலைக் கழிவுகளை அகற்றும் ரோபோ



(டோக்கியோ)

புகுஷிமாவில் உள்ள அணுக்கழிவுகளை அகற்றும் பணியில் ரோபோக்களை ஜப்பான் அரசு ஈடுபடுத்தி வருகின்றது.

ஜப்பானில் 2011 ஆம் ஆண்டு ஏற்பட்ட நில நடுக்கம் மற்றும் சுனாமி காரணமாக புகுஷிமாவில் உள்ள 3 அணுமின் உலைகள் சேதமடைந்தன. இதன் காரணமாக அங்கு அணுக் கழிவுகள் தேங்கிக் காணப்படுகின்றன.

இந்நிலையில் அணுக் கழிவுகள் மனிதர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் அவற்றை பாதுகாப்புடன் அகற்ற ஜப்பான் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எவ்வாறாயினும் அந்த முயற்சிக்கு இதுவரை வெற்றி கிடைக்கவில்லை.

இந்நிலையில் தற்போது அங்குள்ள அணுக் கழிவுகளை அகற்றுவதற்கு ரோபோக்களை ஈடுபடுத்தும் முயற்சியில் ஜப்பான் அரசு இறங்கியுள்ளது.

அந்தவகையில் குறித்த முயற்சி நேற்று உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பணி 10 நாட்களில் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ரோபோ எடுத்து வரும் மாதிரியை ஆய்வு செய்த பின்னர் தான் கழிவை அகற்றுவது எப்படி என்பது முடிவாகும் என்று ஜப்பான் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 ஜனாதிபதி வேட்பாளர்கள் தலைமறைவு-பப்ரல் அமைப்பு தகவல்

(கொழும்பு)

19 ஜனாதிபதி வேட்பாளர்கள் இதுவரை ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பிரசாரங்கள் எதனையும் மேற்கொள்ள வில்லை என தகவல்கள் வெளியாகியுள்ளதாக பப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி யாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தமது அமைப்பு சிறப்பு ஆய்வொன்றினை தொடங்கியுள்ளதாகவும், சிலர் கட்சி அலுவலகங்களை கூட அமைக்க வில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட 39 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ள நிலையில் தற்போது பத்து வேட்பாளர்கள் மாத்திரமே தமது கொள்கைகளை முன் வைத்து பிரசார நடவடிக் கைகளில் ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சில வேட்பாளர்களை கண்டுபிடிக்கப்பட முடியவில்லை என்றும் தேர் தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன. (நி)

## இலட்சக்கணக்கில் அழிக்கப்பட்ட

# தேர்தல் சுவரொட்டிகள்

## பொலிஸார் அதிரடி நடவடிக்கை



(கொழும்பு)

இதுவரையான காலப்பகுதியில் 436,000 சட்ட விரோத தேர்தல் சுவரொட்டிகளை அழித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், 2,400இற்கும் மேற்பட்ட சட்டவிரோத பதாகைகள் மற்றும் கட்அவுட்கள் அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 65 சந்தேகநபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (நி)

# இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொல நியமனம்



(கொழும்பு)

சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக சீதா அரம்பேபொல நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சீதா அரம்பேபொல, சுகாதார இராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்து வரும் நிலையில், அவர் சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை முன்னதாக பெண்கள் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சராக கடமையாற்றி வந்த கீதா குமாரசிங்க, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு தனது ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல் 225



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# போரும் சமாதானமும்

இந்த உலகத்திலே எல்லோரும் அநேகமாக சமாதானத்தைப் பற்றித் தான் பேசுகின் றார்கள். ஆனால் அப்படி பேசிக்கொண்டே அவர்களுக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டிருப்பார்கள். மிகவும் வேடிக்கையான உலகம்.ஏண்டாப்பா சண்டை போடுகின்றீர்கள் என்று கேட்டால். நாங்கள் சமாதானத்தைப் காப்பதற்காக சண்டை போடுகின்றோம் என்று அதற்கு விளக்கம் கொடுக்கின்றார்கள்.

அதன்பின் அவர்களிடம் என்னத்தை பேசுவது? உலகத்திலே மனிதகுணம் குறைந்து கொண்டே வருகிறதோ? இப்படி யோசித்துக் கொண்டிருந்த போது ஒரு பெரியவர் எழுதியிருந்த கட்டுரை ஒன்று கண்ணிலே பட்டது. இரண்டாவது உலக யுத்தம் முடிந்த சமயத்திலே அவர் ஒரு நாவலைப் படித்தாராம். அந்த நாவலை எழுதியவர் பெயர் ஞாபகத்திலே இல்லையாம். ஆனால் நாவலினுடைய பெயர் ஞாபகத்திலே இருக்கிறதாம். ஏப் அண்ட் எஸென்ஸ்.

அந்த கதை என்ன என்பதை அவர் சுருக்கமாக சொல்லியிருந்தார். அதைத் தான் நான் இப்போது உங்களிற்கு சொல்லப் போகின்றேன். ஹாலிவுட்டிலே இருக்கிற ஒரு சினிமா ஸ்ரூடியோ அதற்கு எதிரிலே இரண்டு சினிமா ஆசாமிகள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். காந்திமகான் அமரரான நாள் அது. அதைப்பற்றி அவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த சமயத்திலே ஸ்ரூடியோவிலே இருந்து குப்பை ஏற்றிக் கொண்டு வந்த லொறி ஒன்று அவர்கள் முன்னாலே திரும்பியது. அப்படித் திரும்பின வேகத்திலே குப்பை, காகிதங்கள் உள்ளேயிருந்தது. இரண்டு புத்தகங்கள் நழுவி கீழே விழுந்தன.இவர்கள் எழுந்து ஓடிப்போய் அதை எடுத்துப் பார்த்தார்கள். வில்லியம் டாலிஸ் என்கின்ற எழுத்தாளர் எழுதின திரைக்கதை அது. சினிமா எடுப்பதற்கு அது பிரயோசனமில்லை என்று முடிவு செய்து குப்பைத்தொட்டியிலே போட்டிருக்கின்றார்கள்.

புத்தகத்தை திருப்பிப் பார்த்தால் ஏப் அண்ட எஸென்ஸ் என்று அதற்கு தலைப்பு கொடுத்திருக்கின்றார் அந்த எழுத்தாளர் டாலிஸ். இவர்கள் அதைப் படித்துப் பார்த்தார்கள். அதை திரைக்கதை மிகவும் அருமையாக இருக்கிறது.இவ்வளவு அற்புதமாக எழுதியிருக்கின்ற அந்த எழுத்தாளரை நேரிலே பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். அந்த கையெழுத்துப் பிரதியிலே அவருடைய விலாசம் இருந்தது. அதை வைத்து அவர்கள் தேடிப்போனார்கள். அந்த எழுத்தாளர் பெரிய மேதையாகவும் உயர்ந்த நிலைமையிலும் இருப்பார் என்று நினைத்துக் கொண்டு போனார்கள். ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு சின்ன வீடு. அதற்குப் பின்னாலே ஒரு ஸ்டோர் ரூம் தான் அந்த புத்தகத்திலே இருந்த விலாசம். வீட்டுக்காரார்களிடம் விசாரித்தார்கள் அந்த எழுத்தாளரைப் பற்றி. அவர் ஏதோ மிகவும் வெறுப்பாக பதில் சொன்னாராம். அவ்வளவு எரிச்சல்.

அங்கே இருந்த அவருடைய சொந்தக்காரப் பெண் ஒருத்திதான் அந்த எழுத்தாளரைப்பற்றிய விபரங்களைச் சொன்னாளாம். அந்த சின்ன அறையில் பசியும் பட்டினியுமாகக் கிடந்த டாலிஸ்ஸோட நிலைமை. அவருடைய பழக்கவழக்கம் ஐரோப்பாவிலே மேடை நடிகையாக இருந்த அவருடைய காதலி . அவளோடு வாழ்வதற்காக பணம் சம்பாதிப்பதற்கு அமெரிக்கா வந்தது முயற்சியெல்லாம் வீணாகப் போனது கடைசியிலே அந்த எழுத்தாளர் எங்கேயோ காணாமல் போனது போன்ற எல்லா விபரத்தையும் அந்த பெண் விவரமாகச் சொல்லியிருந்தாள்.

அதைக் கேட்டதும் இந்த சினிமா ஆசாமிகளுக்கு மனது என்னமோ மாதிரி ஆகிவிட்டது. எங்கே போயிருப்பார் அந்த எழுத்தாளர்? சரி அதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்து அவர் எழுதிய ஏப் அண்ட் ஸென்ஸ் என்கின்ற அந்த திரைக்கதையைப் படித்தார்கள். படிக்கப்படிக்க அது கண்முன்னே படம் மாதிரி தெரிகின்றது. அவ்வளவு அபூர்வமாக எழுதியிருக்கின்றார்.

இப்போது நீங்களும் கண்ணை மூடிக்கொண்டு அந்தக் காட்சியைப் பாருங்கள். குரங்குகள் கூத்தாடிக் கொண்டிருக்கிறது. யுத்த நினைவுகளை அது ஏற்படுத்தியது. நடுவிலே ஜன்ஸ்டீன் பரிதாபமாக தவித்துக் கொண்டு நிற்கின்றார். குரங்குகள் எல்லாம் சேர்ந்து அவரை ஒரே அமுக்காக அமுக்குகின்றது. எங்கும் இருட்டு அமைதி. இரண்டாவது உலகமகாயுத்தம் முடிந்து நிலவுகின்ற அமைதியது. உலகம் முழுவதும் காலி. மனிதனே கிடையாது. ஒரே ஒரு சின்ன தீவு மட்டும் அப்படியே இருக்கின்றது. ஒரு தாவர சாஸ்திரி ஒரு பெண், இன்னும் இரண்டு பேர் மட்டும் ஒரு படகிலே அங்கிருந்து புறப்பட்டு வருகின்றார்கள். புதிய உலகம் அவர்களை வரவேற்கின்றது.

அங்கேயிருக்கின்றவர்கள் எல்லோரும் விசித்திரமான மனிதர்கள். சாத்தானை தெய்வமாக கும்பிடுகின்றார்கள். அவர்களிடம் இவர்கள் மாட்டிக்கொண்டு மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். கடைசியிலே ஒரு வழியாக தப்பித்து ஓடுகின்றார்கள். ஒரு இடத்திலே இடிந்து போன கட்டடத்திலே தெருவிலே அநாதையாக நிற்கின்றார்கள். சிதறிக்கிடக்கின்ற மண்டையோடுகள் மிகவும் பிரபலமானவர்களின் உடம்புகள் எல்லாம் அங்கே அலங்கோலமாக கிடக்கின்றது.

எல்லாவற்றையும் இவர்கள் பார்க்கின்றார்கள். உலகத்தை சாத்தான் ஜெயித்து விடுகின்றான். ஆறு விரல், ஏழு விரல் உள்ள மனிதர்களையெல்லாம் உண்டாக்குகின்றான். கடைசியிலே அந்த தாவர சாஸ்திரியினுடைய கார் பயங்கர மனிதர்களைத் தாண்டி போகின்றபோது வீதி ஓரத்திலே ஒரு சமாதியைப் பார்த்தார்கள். அது யாரது என்று அருகில் சென்று பார்த்தால் அது தான் அந்த திரைக்கதையை எழுதிய எழுத்தாளர் டாலிஸ்ஸோட சமாதி. இவர்கள் அந்த சமாதியிலே இரண்டு முட்டைகளை உடைத்து அஞ்சலி செலுத்தி விட்டு மேலே போகின்றார்கள். திரை விழுந்தது. அந்த புத்தகம் இதோடு முடிந்து விடுகின்றது.

இது தான் நான் இன்றைக்கு உங்களிடம் சொல்லலாம் என்று நினைத்த விடயம். இந்தக் காலத்திலே நடப்பதை நினைத்துப்பார்த்தால் எதிர்காலத்திலே அந்தக்கதை உண்மையானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அடுத்த உயிர் அவஸ்தைப்படுவதை இப்போது எல்லாம் மனிதன் ரசிக்க ஆரம்பித்துவிட்டான் சார்.ஒரு பஸ் விபத்து அதிலே ஒருவனுக்கு கை போய்விட்டது. துண்டாக கையை இழந்தவன் வலி தாங்காமல் துடித்துக் கொண்டிருந்தான். அடுத்தவன் அவனுக்கு ஆறுதல் சொல்கின்றான். எப்படித் தெரியுமா? ஏண்டா இப்படி துள்ளுகிறாய். அங்கே பார் தலையே போனவன் எல்லாம் அசையாமல் கிடக்கிறான். நீ கேவலமாக கை போனதற்காக இப்படி துடிக்கிறாயே என்றானாம். அந்த அளவிற்கு ஆகிவிட்டது மனிதாபிமானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற தொழிற்சந்தை



(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச மாபெரும் தொழிற்சந்தை நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும் மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களமும் இணைந்து குறித்த தொழிற்சந்தையை ஏற்பாடு செய்திருந்தன. நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.தஜெயசீலன் கலந்து கொண்டார். (நி)

# கிளி.பதில் அரச அதிபரை சந்தித்த தேர்தல் கண்காணிப்பு குழு



(கிளிநொச்சி)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நாடளாவிய ரீதியில் விஜயம் செய்து தேர்தலுடன் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினரைச் சந்தித்து வருகின்றனர்.

அந்த வகையில் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனை சந்தித்து கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பின் போது, நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் கிளிநொச்சி மாவட்டத்தில் வாக்களிப்பு மற்றும் வாக்கெண்ணல் செயற்பாடுகள், தேர்தல் கடமைகளில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள், வாக்களிப்பு நிலையங்களின் ஏற்பாடுகள் தொடர்பான பல்வேறு தேர்தல் செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

இச் சந்திப்பில் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பு குழுவின் மேற்பார்வையாளர்காளான நிக்கோலஸ் குகூலிஸ் மற்றும் ஜோஹான்னா வான் சம்பீக் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி)

# சோழன் உலக சாதனை படைத்த மட்டக்களப்பு மாணவி




(மட்டக்களப்பு)

அதிவிரைவாகக் கணக்குகளை சரி செய்வதன் மூலம் சோழன் உலக சாதனை படைத்தார் மாணவி காவ்யஸ்ரீ.

மட்டக்களப்பு மாவட் டத்தின் கல்லடியில் வசித்து வரும் பொறியியலாளர் சுப்ரமணியம் மற்றும் மருத்துவர் ஹிசாந்தினி ஆகியோரின் மகளான ஐந்து வயதும் பத்து மாதங்களுமான பள்ளி மாணவி செல்வி. காவ்யஸ்ரீ. இவர் மூன்று, நான்கு, ஐந்து மற்றும் ஆறு வரிசைகளைக் கொண்ட 200 கூட்டல் மற்றும் கழித்தல் கணக்குகளுக்கு 6 நிமிடங்கள் 50 வினாடிகளில் விடையளித்து சோழன் உலக சாதனை படைத்தார்.இதற்கான நிகழ்வானது மட்டக்களப்பு கல்லடியில் அமைந்துள்ள கிரீன் கார்டன் ஹோட்டலில் வைத்து சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. (நி)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அராலி கிழக்கு மெஞ்ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் இடம்பெறவுள்ளது.

உற்சவகால பிரதம குரு கணேஷ கௌரிதாஸ் சிவாச்சாரியார் மற்றும் ஆலய பூசகர் ஐயாத்துரை கண்ணா ஆகியோர் தலைமையில் விசேட பூஜைகள் நடைபெறவுள்ளன.

இறுதி நாளாகிய எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10 வலம்புரிச் சங்கு, 98 இடம்புரிச்சங்கு வைத்து 108 சங்காபிஷேக பூஜை இடம்பெறும். (நி)

# வர்த்தக உலகம்



நான்காம்கட்ட " எடியூகேஷன் யாழ்ப்பாணம்" கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா பொது நூலகத்திலும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்திலும் நடைபெற்றது.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, கனடா, நியூசிலாந்து, ஜேர்மனி, அமெரிக்கா போன்ற பல நாடுகளில் பல உயர் கல்வி வாய்ப்புகளுடன் வவுனியா மற்றும் யாழ்ப்பாண இளைஞர் யுவதிகளை சந்தித்த ICFS கல்வியின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஷர்மிளா, சந்திரவதனிகுழுவினர் மாணவர்களுக்கு விளக்கமளித்தனர்.



## அருள்மிகு காரைநகர் களபூமி கற்பக விநாயகர் பேரருள் பைரவரை வணங்கி ஆணவம் கொண்ட பிரம்மனின் கர்வம் அடங்கச் செய்தவரை வணங்கிட மக்கள் அனைத்து வளங்களையும் பெற்று சிறப்புடன் வாழலாம்.

**விரித்த பல் கதிர் கொள் சூலம் வெடிபடு தமருகம் கை**
**தரித்ததோர் கோல கால பைரவனாகி வேழம்**
**உரித்து உமை அஞ்சக் கண்டு ஒண் திருமணிவாய் விள்ளர்**
**சிரித்து அருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே.**

சிவபெருமான்திருச்சேறைத் தலத்தில் கால வைரவர் காட்சி தர அவரை வழிபட்ட திருநாவுக்கரசர் பாடல் ஆகும்.

சிவபெருமானின் ஐந்து குமாரர்களாக கணபதி, முருகன், பைரவர், வீரபத்திரர், சாஸ்தா (ஐயனார்) என்றும் சொல்லப்படும் ஐவரில் மகா பைரவர் பொதுவாக ஈசான்ய மூலையாகிய வடகிழக்கு திசையில் நிர்வாணக் கோலத்தில் எம்பெருமானாகிய காவல் தெய்வம் பைரவர்.

ஆணவம் கொண்ட பிரம்மனின் செருக்கு அழிய ஐந்து தலையில், ஐந்தாவது தலையை நீக்கி நான்முகன் ஆக்கிய சிவ சொரூபமே பைரவர் என காசி காண்டம் சொல்கிறது.

மன்மதனின் கர்வம் அடங்கச் செய்தவர். முனிவரின் சாபத்திலிருந்த தேவேந்திரன் மகன் ஜெயந்தனைக் காத்தவர்.

சனியை சனீஸ்வரராக்கி நவகோள்களில் வலிமை வாய்ந்த கோளாக உயர்த்தி பெருமைசேர்த்தவர்.இவரைக் கால பைரவர், சத்ரு சம்ஹார பைரவர், வடுக பைரவர். சொர்ணகர்சன பைரவர் எனும் பலபல நாமத்தால் அழைத்து நாமும் வழிபடுவோம்.

அந்தகாசுரன் என்னும் அரக்கனின் அட்டூழியங்களை ஒழிக்க தேவர்கள் சிவனாரை வேண்ட, சிவன் இதயக் கமலமாகிய அக்னியிலிருந்து விஸ்வரூபமெடுத்து அசுரர்களை முழுவதுமாக அழித்து தேவர்களுக்கு அமைதியைத் தந்தவர். எல்லாம் பைரவர் பேராற்றல் ஆகும்.

**ஸ்ரீசதுர் காலபைரவர் ஷ்டோத்ரம்த்யானம்**

**அயன் தலை கொய்து கொண்டாய்**
**அரி உடல் உரி அணிந்திய**
**வெயில் விடும் சூலம் ஏந்தி**
**வெகுளி யின் வடிவாய் நின்றாய்**
**வயிரவா கடைக்கண் பார்ப்பாய்**
**வளமெல்லாம் வாழ்வில் சேர்ப்பாய்**
**துயர் பகை நோய் வராமல் தொழு**
**தெழும் எம்மைக் காப்பாய்**

பைரவப் பொருமானை காலையில் வழிபட சர்வநோய்களும் நீங்கும். பகலில் வழிபட விரும்பியது கிட்டும். **மாலையில் வழிபட இதுவரை செய்த பாவங்கள் யாவும் விலகும்.** அர்த்த சாமத்தில் வழிபட வாழ்வில் எல்லா வளமும் பெருகி மன அமைதி யும், அகத்தூய்மையும், ஒருமைப்பாடும் கிடைத்து முக்தி நிலையும், மரணமில்லா நல் பெரு வாழ்வும் கிட்டும். இன்று நமது குலதெய்வம் களபூமி கற்பக விநாயகரை சாயந்தரம் 3 மணியளவில் பொங்கல் செய்து பைரவர் பூஜை செய்து திருமுறைகளும் விநாயகர் அகவல், திருப்புகழ் ஓதி அன்பே சிவமாக மண் ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து சைவநெறி, அன்பு நெறியில் வாழ்ந்து உய்வோமாக.



(சி-1166)

**க.கு.க.சிவபாலன் K.K.K. (போசகர்)**
**காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயம்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 578





இப்போது, செம்பியன் மாதேவியே தஞ்சைக்குச் செய்தி சொல்லி அனுப்பியிருந்தார். தமது கணவருடைய விருப்பங்களில் முக்கியமானதொரு விருப்பத்தை நிறைவேற்றத் திட்டமிட்டிருப்பதாகவும் அந்தச் சந்தர்ப்பத்தில் தம் குமாரன் தம்முடன் இருக்க வேண்டும் என்றும் தெரியப்படுத்தியிருந்தார். அதன்படியே சின்னப் பழுவேட்டரையர் மதுராந்தகரைப் பழையாறைக்குப் போய்வரும்படி கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் தஞ்சைச் சிம்மாசனத்துக்குத் தமக்குள்ள உரிமைபற்றித் தாயிடம் வாதாடி அவருடைய மனத்தை மாற்ற முயலும் படியும் சொல்லி அனுப்பினார்.

### அத்தியாயம் 17
### திருநாரையூர் நம்பி

மதுராந்தகத் தேவர் தமது பரிவாரங்களுடனும் வந்தியத் தேவனுடனும் பழையாறை நகருக்குள் பிரவேசித்தார். ஆரியப்படை வீடு, பம்பைப் படை வீடு, புதுப்படை வீடு, மணப்படை வீடு முதலான, வீரர்கள் வாழும் பகுதிகளின் வழியாக ஊர்வலம் சென்றது. பிறகு கடை வீதிகள், குடிமக்கள் வாழும் பகுதிகள், ஆலயங்கள், ஆலயங்களைச் சூழ்ந்திருந்த சந்நிதித் தெருக்கள் முதலியவற்றின் வழியாகச் சென்றது. ஆங்காங்கு ஒரு சிலர் வீட்டு வாசல்களில் நின்று பார்த்தார்கள்.

ஆனால் மக்களிடையே எவ்வித உற்சாகமும் இல்லையென்பதை வந்தியத்தேவன் கண்டான். முதன்முறை அவன் இந்நகருக்குள் வந்திருந்தபோது நகரம் கோலாகலத்தில் மூழ்கியிருந்தது. இப்போது வீதிகள் ஜன சூனியமாயிருந்தன. பழையாறை பாழடைந்த நகரமோ என்று சொல்லும்படி இருந்தது. மதுராந்தகத்தேவர் மீது பழையாறை மக்கள் அவ்வளவாக விசுவாசம் கொண்டிருக்கவில்லை என்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது. வந்தியத்தேவனுக்கு இது ஒரு விதத்தில் சௌகரியமாயிருந்தது. தன் முகம் தெரிந்தவர்கள் யாரேனும் தன்னைப் பார்க்கும் படி நேரவும் அதனால் தொல்லை ஏற்படவும் இடமில்லையல்லவா?

இவர்கள் சோழ மன்னர்களின் புராதன அரண்மனை வீதியை நெருங்கிக் கொண்டிருந்த சமயத்தில் இன்னொரு பக்கமிருந்து பெரியதோர் ஊர்வலம் வந்து கொண்டிருந்ததைக் கண்டார்கள். அந்த ஊர்வலத்தின் மத்தியில் திறந்த பல்லக்கு ஒன்று வந்து கொண்டிருந்தது.

அதில் இருந்தவர் யாரென்பது நன்கு தெரியவில்லையாயினும் யாரோ சிவனடியார் என்றும் இளம் பிராயத்தினர் என்றும் தோன்றியது. சிவிகைக்கு முன்னும் பின்னும் ஜனக் கூட்டம் அதிகமாயிருந்தது. கையில் தாளங்களை வைத்து இனிய ஜங்கார ஓசையை எழுப்பிக் கொண்டு சிலர் பல்லக்கின் முன்னாலும் பின்னாலும் பாடிக்கொண்டு வந்தார்கள்.

இடையிடையே "திருச்சிற்றம்பலம்" "ஹரஹரமகாதேவா!" என்ற கோஷங்களுடன் "திருநாரையூர் நம்பி வாழ்க!" "பொல்லாப் பிள்ளையாரின் அருட்செல்வர் வாழ்க!" என்ற கோஷங்களும் எழுந்து வானை அளாவின.

மதுராந்தகர் அந்த ஊர்வலத்தை அசூயை கொண்ட கண்களினாலேயே பார்த்தார். பக்கத்திலிருந்து வீரனைப் பார்த்து ஏதோ கேட்டார். "ஆம் பல்லக்கிலே வருகிறவர்தான் திருநாரையூர் நம்பி!" என்று அவன் மறுமொழி கூறினான். "இருந்தாலும் என்ன தட புடல்! இந்த ஊரில் நம்மை யாரும் கேட்பாரைக் காணோம்! இந்த நம்பியைச் சூழ்ந்து கொண்டு ஜனங்கள் இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்கிறார்களே?" என்றார் மதுராந்தகத்தேவர்.

அந்த ஊர்வலம் இவர்கள் இருந்த இடத்திலிருந்து சற்று தூரத்திலேயே சென்றது. ஆயினும் பல்லக்கின் அருகில் வந்தவர்களில் ஒருவர், முன்னொரு சமயம் கொள்ளிட நதியைப் படகிலே தாண்டியபோது ஆழ்வார்க்கடியானோடு சண்டையிட்ட வீரசைவர் என்று வந்தியத் தேவனுக்குத் தோன்றியது.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## பேசுவதும் நடந்து கொள்வதும்

ஒரு ஊரில் பிற்படுத்தப்பட்டோர் சமூகத்தில் பிறந்த ஒருவன், பலருடைய உதவியால் படித்துப் பட்டம் பெற்றான். பிறகு சிபாரிசினால் அரசாங்க வேலையில் அமர்ந்து பின்னர் அதிகாரி ஆனான்.

அவன் அதிகாரியான பின், எப்பொழுதும் "சமத்துவம், சகோதரத்துவம்" (அனைவரும் சமம், அனைவரும் சகோதரர்கள்) என்று எப்பொழுதும் கூறிக் கொண்டிருப்பது வழக்கம்.

அந்த அதிகாரி தன்னுடைய இல்லத்தில் பிரார்த்தனை நடத்துவதற்காக அருளாளர் ஒருவரை வரும்படியாகச் சொல்லி இருந்தார். அவரும் வந்தார்.

பிரார்த்தனை தொடங்கும்போது அதிகாரியின் குடும்பத்தினர் அனைவரும் வந்து அமர்ந்தனர்.

"உங்கள் வீட்டில் வேலைக்கு ஆணோ, பெண்ணோ இருக்கின்றனரா? இருந்தால், அவர்களையும் அழையுங்கள்" என்றார் அருளாளர்.

அப்போது அடுக்களையிலிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த வேலைக்காரப் பெண்ணை பிரார்த்தனை அறைக்கு வருமாறு கூறினார்.

பரட்டைத் தலையுடன் அழுக்குப் படிந்த பாவாடை தாவணி அணிந்திருந்த அந்தப் பெண்ணைப் பார்த்தார் அருளாளர். அந்தப் பெண்ணின் அலங்கோலத்தைப் பார்த்து முகம் சுளித்தார் அருளாளர்.

அந்த அதிகாரியைப் பார்த்து, "சமத்துவம் சகோதரத்துவம்" என்று எப்போதும் பேசிக்கொண்டிருக்கிறீர்களே! உங்களுக்காக உங்கள் வீட்டில் நாள் முழுதும் உழைத்துக் கொண்டிருக்கும் ஒரு சிறுமியை இப்படியா வைத்திருப்பது? வேலை ஆட்களை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள எண்ணினேன்.

இப்பொழுது நன்றாகவே அறிந்து கொண்டேன். "சமத்துவம் சகோதரத்துவம்" என்பது இதுதானா?" என்று சற்று கடுமையாகக் கூறினார் அந்த அருளாளர்.

அதிகாரி வெட்கத்தால் தலைகுனிந்தார். எதுவும் பேச இயலவில்லை.

பொதுவாக, பெரும்பாலோர் பிறருக்கு அறிவுரை கூறுவார்கள். ஆனால், தாங்கள் மட்டும் கடைப்பிடிக்க மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்போதில்லையேல் எப்போதும் இல்லை" எனும் மந்திரச் சொல்லை சதா நினைவில் வையுங்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்ப் பொது வேட்பாளர் சிங்கள மக்களிடமும் செல்ல வேண்டும்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்ப் பொது வேட்பாளர் அரிய நேத்திரன் தமிழ் மக்களிடையே பிரசாரம் செய்து வருகின்றார்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாசைகளை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறமுடியும் என்பது தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தியவர்களின் கருத்தாக உள்ளது.

நல்லது. இன்னமும் சர்வதேச சமூகம் எமக்கு உரிமையைப் பெற்றுத்தரும் என்ற அவர்களின் நம்பிக்கையை நாம் ஒரு போதும் சிதைக்க விரும்பவில்லை.

ஏதோ எங்களுக்குப் பின்பேனும்; சர்வதேச சமூகம் இலங்கையில் நடந்த தமிழின அழிப்பை – வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த போர்க்குற்றங்களை – சிங்களப் பேரின வாதம் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்குச் செய்கின்ற ஈனத்தனத்தை உணர்ந்து கொண்டு, இலங்கை ஆட்சியாளர்களுக்கு அழுத்தம் கொடுத்து, இலங்கை மண்ணில் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையோடு வாழ்வதற்கு வழிவகுத்தால், அது கண்டு தேகாந்த நிலையிலேனும் நாம் திருப்தியடைய முடியும்.

இது ஒருபுறமிருக்க, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற முக்கிய சிங்கள வேட்பாளர்கள் தமது தேர்தல் பிரசாரங்களை தமிழர் தாயகத்திலும் முடுக்கி விட்டுள்ளனர்.

இவ்வாறு தமிழர் பகுதியில் தேர்தல் பிரசாரம் செய்கின்ற சிங்கள வேட்பாளர்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றியும் இனவாதம் இனி செல்லுபடியாகாது என்பதாகவும் பிரசாரம் செய்கின்றனர்.

அப்படியானால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற தமிழ்ப் பொது வேட்பாளர், தென்பகுதிக்குச் சென்று அன்பார்ந்த சிங்கள மக்களே! நாங்கள் உங்களுக்கு எதிரானவர்கள் அல்ல. நாங்களும் உங்களைப் போல் சம உரிமையுடன் வாழ விரும்புகின்றோம்.

இனவாத ஆட்சியாளர்கள் தமிழினத்துக்குச் செய்த கொடுமைகளை உங்களில் பலர் எதிர்த்தீர்கள் என்பதை நாம் நன்கு அறிவோம்.

இந்த நாட்டின் ஒரு பிரஜையாக உங்களிடம் வந்திருக்கின்றேன். உங்கள் பெறுமதியான வாக்கை எனக்கு வழங்குங்கள் என்று பிரசாரம் செய்ய வேண்டும்.

அவ்வாறு பிரசாரம் செய்யும் பட்சத்தில், குறிப்பிட்டளவு வாக்குகளை சிங்கள மக்களிடம் இருந்து தமிழ்ப் பொது வேட்பாளரால் பெறக்கூடியதாக இருக்கும்.

அவ்வாறு பெற முடியாவிட்டாலும் பரவாயில்லை. தமிழ் மக்களின் நிலைப்பாட்டை சிங்கள மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு ஜனாதிபதித் தேர்தலை தமிழ்ப் பொது வேட்பாளரும் தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பும் நல்லதொரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

# தமிழ்ப்பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும்

## தமிழக திராவிட முன்னேற்றக் கழகம் தெரிவிப்பு

இலங்கையில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், வடக்கு கிழக்கு பகுதியை பிரதிநிதித்துப்படுத்தி போட்டியிடும் தமிழ்ப்பொது வேட்பாளருக்கு தமிழகத்தில் இருந்து ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி அறிக்கை ஒன்றை வெளியிட்டு தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இலங்கையில் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடக்கவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழீழ மக்களின் விடுதலை, நீதிக்கான கோரிக்கைகளின் குறியீடாக பொது வேட்பாளர் ஒருவர் போட்டியிடுகின்றார்.

இதன் மூலம் உலகத்திற்கு தமிழ்த்தேசிய இனத்தின் இருப்பையும் விருப்பையும் அறிவிப்பது என்ற நோக்கில் அங்குள்ள விடுதலை ஆற்றல்கள் முன்முயற்சி எடுத்துள்ளன.

இதன் பொருட்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிடுகிறார்.

தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க வேண்டும் என்பதை ஓர் அறைகூவலாக விடுக்கின்றேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சார்க் திரைப்பட தினம்
### வடக்கு ஆளுநர் பங்கேற்பு

சார்க் கலாசார நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண மத்திய கலாசார நிலையத்தில் நேற்று சார்க் திரைப்பட தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், இலங்கைக்கான நேபாள நாட்டு உயர்ஸ்தானிகராலயத்தின் அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள்,

"சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடு என்ற வகையில் நாம் பெருமை அடைகின்றோம். எமக்கு நீண்டகால வரலாற்றை கொண்ட கலாசாரம் காணப்படுகிறது.

இந்து மற்றும் பௌத்தம் தொடர்பான மிக முக்கியமெய்யியல்வரலாற்றுச் சிறப்பைக் கொண்டதே எமது பிராந்தியம். அந்த மெய்யியல் தத்துவங்கள் உலகளாவிய ரீதியில் பரவியுள்ளன.

உலகப்பொருளாதாரத்தில் இந்தியா ஒரு முக்கிய புள்ளியாகத் திகழ்கிறது. வடக்கில் திரைப்படத்துறை மெதுவாக வளர்ச்சி அடைந்து வருகிறது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இந்த நிகழ்வை நடத்துகின்றமை காலத்திற்குப் பொருத்தமானதாகக் காணப்படுகிறது.

இங்குள்ள திரைப்படத்துறையினருக்கு புத்துணர்ச்சி வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்கான ஆரம்ப நிகழ்வாக இது அமைய வேண்டும். இந்நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களுக்கு நன்றி" எனக் கருத்துத் தெரிவித்தார். (ம-7)

## லொறி மோதியதில் தாய் பலி ; மகள் படுகாயம்

அநுராதபுரம் பாதெனிய வீதியில் அம்பன்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் தாய் உயிரிழந்துள்ளதுடன் மகள் படுகாயமடைந்துள்ளதாக அம்பன்பொல பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பன்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய தாயொருவரே உயிரிழந்துள்ளார்.

பாதெனியவிலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த லொறியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, மோட்டார் சைக்கிளில் அமர்ந்திருந்த தாயும் 10 வயது மகளும் படுகாயமடைந்துள்ள நிலையில், அம்பன்பொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் தாய் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் அம்பன்பொல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## வட்டுக்கோட்டையில் பாரதியார் வீதி திறப்பு

*(யாழ்ப்பாணம்)*

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் நினைவு தினமான நேற்று வட்டுக்கோட்டை தென்மேற்கில் பாரதியார் ஞாபகார்த்தமாக வீதி ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விருந்தினர்கள் மங்கல இசை வாத்தியங்கள் முழங்க அழைத்துவரப்பட்டு, மங்கல விளக்கேற்றலுடன் வீதி திறப்பு நிகழ்வு நடைபெற்றது.

அடுத்து, விருந்தினர்களது உரைகளைத் தொடர்ந்து வீதி திறக்கப்பட்டது.

யாழ். நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சிதம்பரமோகனின் தலைமையில் நடைபெற்ற இந்த வீதித் திறப்பு நிகழ்வில் மறவன்புலவு சச்சிதானந்தம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். (ம-7)

## சட்டவிரோத மருந்துகளுடன் இந்தியப் பிரஜையொருவர் கட்டுநாயக்கவில் கைது

*(கொழும்பு)*

சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட மருந்து வகைகளுடன் இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த மருந்து வகைகளின் மொத்தப் பெறுமதி 25 இலட்சம் ரூபா ஆகும் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விமானம் மூலம் பல்வேறு மருந்து வகைகளைக் கொண்டு வந்து வைத்தியசாலைகள் மற்றும் மருந்தகங்களில் விற்பனை செய்யும் வர்த்தகர் என்றும் சுங்கத் துறை தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேக நபர் நேற்று அதிகாலை 04.30 மணியளவில் இந்தியாவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தவேளை,

விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப்பொதிகளிலிருந்து சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை மருத்துவ சங்கத்தின் அனுமதியின்றி சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட மருந்து வகைகள் இனங்காணப்பட்டதையடுத்து அவர் கைது செய்யப்பட்டதோடு,

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளால் சந்தேக நபருக்கு எதிராக ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

10

### சுவிஸ் சமஷ்டிக்கான அரசியலமைப்பு சார் விதிமுறைகள்

● சமஷ்டி யாப்பின் 1 ஆம் உறுப்புரைக்கு ஏற்ப சுவிட்சர்லாந்து கன்டன் 26 இனை உள்ளடக்கியது. ஆறு அரை கன்டன்களாகும். கன்டன் என்பது சுவிட்சர்லாந்துக்கே உரித்தான விசேடமான சுய நிர்வாக அலகாகும்.

● அரைக் கன்டன்களுக்குக் கூட ஏனைய கன்டன்களைப் போன்று ஒத்த நிலையொன்று காணப்படினும் கூட்டு நிறைவேற்று சித்தாந்தத்தின்போது இவற்றுக்கு அரை பிரதிநிதித்துவமே உரித்தாக்கப்பட்டுள்ளது.

● இதற்கமைய தேசிய சபையில் ஏனைய கன்டன்களுக்கு பிரதிநிதிகள் இருவர் வீதம் கிடைக்கும் போது அரைக்கன்டன்களுக்கு பிரதிநிதி ஒருவரே கிடைப்பர்.

● அதேபோன்று மத்திய அரசு மட்டத்தில் மக்கள் கருத்துக் கணிப்பொன்றின் அங்கீகாரம் தேவையான போது கன்டன் தேர்தலில் இதன் வாக்கு அரைவாசியாகவே கருதப்படும்.

● 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின்படி வரையறுக்கப்பட்டுக் குறிப்பிட்டுக் கூறமுடியாதளவிற்கு கன்டன்கள் இறைமை பொருந்திய அலகொன்றாக உள்ளது. "கன்டன் இறைமை" என்பது தமது பூகோள அலகினுள் சுயமான நிர்வாகம் தொடர்பில் உரிமையைப் பெற்றுக்கொள்ளும் என்பதே இதன் பொருளாகும்.

● மத்திய அரசு கன்டன்களின் இறைமைக்குக் கௌரவமளிப்பதற்குக் கடப்பாடுடையதாக இருக்கும். எவ்வாறாயினும் இவ்விறைமையானது முழுமையானதல்ல.

● அரசியலமைப்பினால் கன்டன்களின் மீது விதிக்கப்பட்டுள்ள வரையறைகள் சில பின்வருமாறு:

o அரசியலமைப்பு பிரஜைகளுக்கு அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுத்துள்ளது. கூடிய சட்ட ரீதியான மீள்கண்காணிப்புச் செய்யும் அதிகாரத்தை சமஷ்டி நீதிமன்றுக்கு ஒப்படைப்புச் செய்துள்ளதன் மூலமே கன்டன் அதிகாரமிக்க அதிகாரிகள் ஊடாக அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்றது. இதனால் இவ்வுரிமைகளை மீறும் அதிகாரம் கன்டன்களுக்கு கிடையாது.

o மத்திய அரசினால் வழங்கப்பட்ட சட்டங்களை விதித்தல் மற்றும் நிறைவேற்றும் அதிகாரம் மூலமும் கன்டன்களின் இறைமையை மட்டுப்படுத்தியுள்ளது.

● மத்திய அரசிடம் உள்ள அதிகாரங்களைக் குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலமே சமஷ்டி ஆட்சி முறைக்கும் கன்டன்களுக்குமிடையிலான அதிகாரப் பகிர்வுக்கு இடம் பெற்றுள்ளது. இதற்கமைய சமஷ்டி அரசிடம் காணப்படும் அதிகாரங்கள் அரசியலமைப்பில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கமைய மத்திய அரசாங்கம் அல்லது கன்டன் அரசாங்கங்களுக்கு உரியதல்லாத விடயத்துறையொன்று காணப்படுவதில்லை.

● அரசியலமைப்பில் எழுத்து மூலம் சுட்டிக்காட்டப்படாத புதிய துறைகள் தொடர்பாக சட்டத்தை விதிக்கும் அதிகாரம் இயல்பாகவே கன்டன்களுக்கு உரித்தாகும்.

● அதேபோன்று அரசியலமைப்புத் திருத்தஞ்செய்தல் மத்தியரசின் விடயத்திற்குட்பட்டதாகும். எனவே மத்திய அரசின் மூலமே அதிகாரப் பகிர்வு தீர்மானிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் மத்திய அரசிடம் காணப்படும் இவ்வதிகாரம் கன்டன்களிடம் காணப்படும் கூட்டு நிர்வாகம் எனும் தத்துவத்தின் மூலம் மட்டுப்படுத்தப்படுகின்றது.

● ஓரங்க மேற்பார்வையொன்று தேவைப்படும் பணிகளுக்காக மட்டுப்படுத்தப்பட்டிருக்கும் போது மட்டும் சுவிட்சர்லாந்து சமஷ்டி முறையில் உள்ளடங்கும் மேற்பார்வைத் தத்துவத்தை சமஷ்டி அரசு பொறுப்பேற்றுக்கொள்ளும். இதன்மூலமே சமஷ்டி அரசின் கீழ் மட்டம் வரையிலான அதிகார ஒப்படைப்பு (Subsidiarity) எனும் கோட்பாடு கட்டுப்பாடுடையதாக மாறுகின்றது.

### கன்டன்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சுயாட்சி நிர்வாக அதிகாரங்கள்

கன்டன்களுக்கு கீழ்வரும் சுயாட்சி நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**1.மாநிலம் எனும் கன்டன் அரசியலமைப்பு**

மாநிலங்களுக் குரிய அரசியலமைப்பினை உருவாக்கும் பொறுப்பு மாநிலங்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது. கன்டனே தமது ஆட்சி முறையைத் தீர்மானிக்க வேண்டும்.

**2.பிரதேச ரீதியான நிர்வாக அலகு**

அந்தந்தக் கன்டன்கள் தமது பிரதேசத்தின் நிர்வாக சபைகளுக்கு பல்வேறு அதிகாரங்களை வழங்கியுள்ளன. ஆயினும் குறிப்பிட்ட சந்தர்ப்பமொன்றின்போது அவ்வதிகாரங்களை ஒப்படைத்ததன் பின்னரும் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் சுவிட்சர்லாந்து சமஷ்டி நீதிமன்றின் மூலம் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

**3. கல்வி**

புராதான காலம் தொட்டே கன்டன்களுக்கே கல்வித்துறை உரியதாக இருந்தது. அதனால் கன்டன்கள் மூலம் பாடவிதானங்களை உருவாக்கவும் கல்விப் பணியாளர் குழுவினரைத் தெரிவு செய்தலும் நிறைவேற்றப்படுகின்றது.

**4. பொதுமக்கள் சமாதானம்**

அமைதியான காலப்பகுதிகளின் போது மக்களின் சமாதானத்தைப் பேணும் பொறுப்பு கன்டன்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**5. கலாசாரம்**

கலாசார நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதும் கலாசார உரிமைகளைப் பாதுகாத்தலும் சில வரையறைகளின் கீழ் கன்டனின் பொறுப்பாக இருக்கும்.

**6. உட்கட்டமைப்பு வசதிகள்**

வீதிகளை உருவாக்குதல், நீர், மின்சார வசதிகளை பெற்றுக் கொடுத்தல் என்பன அநேக சந்தர்ப்பங்களில் கன்டனின் பொறுப்பாக உள்ளது.

**7. நேர்வரி**

கன்டன்களுக்கு தத்தமக்குரிய வரிகளை அறவிட்டுக்கொள்வதற்கும் வரியினைத் தீர்மானிக்கவும் முடியும்.

### கன்டன்களின் முக்கியத்துவம்

● இயன்றளவில் கீழ் மட்டம் வரையில் அதிகாரம் ஒப்படைக்கப்படல் தொடர்பான கோட்பாடு (Principle of subsidiarity) சட்டத்தைச் செயலுருப்படுத்துவதற்கேதுவதாக உள்ளது. சமஷ்டி அரசின் சட்டங்களுள் அநேகமானவை மத்திய அரசாங்கத்தின் மூலம் அன்றி கன்டன்கள் மூலமே செயலுருப்படுத்தப்படுகின்றது.

● இதன்மூலம் கன்டனின் முக்கியத்துவம் மேல்நிலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட கொள்கைக்கமைய உச்ச ளவில் மத்தியரசின் சட்டங்களை செயலுருப்படுத்தும் அதிகாரத்தை கன்டன்களுக்கு வழங்க வேண்டியேற்பட்டுள்ளது.

● சில கட்டமைப்புகளைப் பிரயோகிப்பதன் மூலம் சமஷ்டி மட்டத்தில் தீர்மானம் எடுப்பதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கும் கன்டனுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. சமஷ்டி அரசாங்கம் சுயமாகச் சட்டங்களை உருவாக்கும்போது அதுதொடர்பில் கன்டன்களுக்கு அறிவிக்கவேண்டும்.

● இதற்கமைய சட்டங்களை உருவாக்கும்போது கன்டன்களிடம் ஆலோசனைபெறல் இடம்பெறுகிறது. இதற்கமைய சட்டம் தொடர்பான முன்மொழிவுகளைச் சமஷ்டி சட்ட வாக்கத்தினருக்கு அறிவிப்பதற்கு முன்னர் கன்டன்களுக்கு அச்செயற்பாடு தொடர்பாக அழுத்தம் கொடுக்கும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

● சமஷ்டி சட்டவாக்கத்துறை இரு சபைகளால் ஆனது. இதன் தேசிய சபை மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அரச சபை கன்டன்களைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

o அரச சபையில் கன்டனுக்குச் சமமான பிரதிநிதித்துவம் கிடைக்கும். அவ்வவ் குழுக்களுக்குச் சமமான அதிகாரங்கள் காணப்படும்.

o எவ்வாறாயினும் அரச சபை தொடர்பில் கன்டனுக்கு வரையறைக்குட்பட்ட அழுத்தங்களை மேற்கொள்ள முடியும். ஏனெனில் அரச சபையின் பிரதிநிதித்துவத்தை சட்ட ரீதியாகக் கட்டுப்பட்டிருக்கக் கூடிய முறையில் ஆலோசனைகளை கன்டன்களுக்கு வழங்க முடியாதிருப்பதே இதற்கான காரணமாகும்.

o எவ்வாறாயினும் கன்டனுக்குத் தேசிய சபையின் மீது மறைமுகமாக அழுத்தத்தை தேர்தல் முறையினூடாக மேற்கொள்ள முடியும். அப்பிரதிநிகள் மீளத் தெரிவு செய்யப்படும்போது கன்டன்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியப்படுகின்றது.

### அபிப்பிராய வாக்கெடுப்பும் கன்டன்களும்

● அதேபோல் மக்கள் கருத்துக்கணிப்பு முறையின் மூலம் மத்திய அரசின் நிர்வாகத்தை சிக்கலடையச் செய்யும் வாய்ப்பினைக் கன்டன்களுக்குப் பெற்றுக் கொடுத்துள்ளது.

● இதற்கமைய சமஷ்டிச் சட்டம் மற்றும் சட்ட மறுசீரமைப்பு என்பன மக்கள் கருத்துக் கணிப்பிற்கு உட்படுதல் வேண்டும் என கோரப்படும் போது அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படல் வேண்டும். இங்கு இருமுறைகளில் கருத்துக் கணிப்பு நடைபெறுகின்றது.

1. பொதுவான சட்டமொன்றாக இருப்பின், மக்கள் கருத்துக் கணிப்பு மாற்று வழிமுறையொன்றாகும். ஐம்பதாயிரம் வரையிலான பிரஜைகள் அல்லது எட்டு கன்டன்கள் கோரிக்கை விடுத்திருப்பின் மட்டுமே மக்கள் கருத்துக் கணிப்பு நடைபெறும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் பிரசார...

ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

இந்நிலையில் சிறுவர்களைத் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் நடவடிக்கைகளுக்குச் சிறுவர்களைப் பயன்படுத்த வேண்டாம் எனத் தேர்தல் கண்காணிப்பு அமைப்பு அரசியல் கட்சிகளுக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 350 கைதிகள்...

பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 34வது சரத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் இந்த கைதிகளுக்கு விசேட ஜனாதிபதி மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் திஸாநாயக்க தெரிவித்தார். (ம-7)

## ஈஸ்டர் தாக்குதல்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகைக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பு பேராயர் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நியமிக்கப்படுகின்ற நீதிமன்ற கட்டமைப்புக்கு தாம் தோள் கொடுப்பதாகவும், நீதிமன்ற கட்டமைப்பை மேலும் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், இதற்காக மேற்கொள்ளவேண்டிய சட்ட ரீதியான நடவடிக்கைகளை முறையாகச் செய்து தருவோம் என்றும் சஜித் பிரேமதாஸ இதன்போது வாக்குறுதியளித்தார்.

அவ்வாறே, உயர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதோடு, இதன் பிரதான சூத்திரதாரிக்கு தகுதி தராதரம் பாராது தண்டனையைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார். (ம-7)

## கெஹலிய...

தரமற்ற மருந்து இறக்குமதி செய்த குற்றச்சாட்டில், விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்த அவர் கடந்த பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வந்த அவர் உட்பட மூன்று சந்தேக நபர்கள் நேற்று புதன்கிழமை மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, கைது செய்யப்படும் போது அமைச்சராக இருந்த கெஹலிய ரம்புக்வெல, பெப்ரவரி 06ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்குக் கடிதம் ஒன்றை அனுப்பி அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வைத்திய...

பிரபாத் சுகதபால தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடளாவிய ரீதியாகவுள்ள சகல அரச வைத்தியசாலைகளிலும் நேற்று கறுப்புக் கொடி பறக்கவிடப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தென்னிலங்கை...

களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தென்னிலங்கை வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இந்த நாட்டிலே நடந்த நீண்ட கால இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது சுட்டிக் காட்டப்படவில்லை.

அந்தப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும், குறிப்பாக சமஷ்டி அடிப்படையிலான தீர்வைக் கொடுக்க வேண்டும் என்ற எந்த ஒரு வாசகங்களும் அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால் எனது தமிழ்த் தலைமைகள் கூறிய விடயம் என்னவெனில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை முன்வைத்தால் நாங்கள் அனைவரும் அவர்களைப் பரிசீலிக்கத் தயார் என்று கூறியிருந்தனர்.

மாறாக அவர்களின் எந்த ஒரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சமஷ்டி தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

2015 நல்லாட்சி அரசாங்கத்திற்குள் ஏக்கிய ராஜ்ய என்பதற்குள் நாங்கள் சமஷ்டியையும் தேடினோம். அதுகூட இவர்களது விஞ்ஞாபனங்களில் இல்லை.

எனவே அரசியல் தீர்வை முன்னிலைப்படுத்தாத வேட்பாளர்களாகவே இந்தப் பிரதான மூன்று வேட்பாளர்களும் செயற்படுகின்றனர் என்றார். (ம-7)

## அர்ச்சுனா...

வழக்குகள் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. ஏனைய மருத்துவர்களுக்கு எதிராக அர்ச்சுனா பரப்பிய அவதூறுகளுக்கான ஆதாரங்களை முன்வைக்குமாறு நீதிமன்றம் ஏற்கெனவே 3 முறை அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கியிருந்தது. நேற்று 4ஆவது தவணையாகும்.

சாவகச்சேரி வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரிக்கு எதிராக பாலியல் குற்றச்சாட்டு உள்ள அவதூறுகளைப் பரப்பியது தொடர்பான வழக்கு முதலில் எடுக்கப்பட்டபோது, அர்ச்சுனா தரப்பு சில ஆவணங்களை சமர்ப்பித்து, தமது குற்றச்சாட்டுகளுக்கான ஆதாரங்களென்த் தெரிவித்தனர். எனினும், அவற்றை நீதவான் நிராகரித்தார். அர்ச்சுனா பரப்பிய தகவல்களுக்கான ஆதாரங்களாக அவற்றை கொள்ள முடியாதென தெரிவித்தார்.

அர்ச்சுனா இராமநாதனினால் தினம் தினம் பிரச்சினைகள் உருவாகுவதாகவும், அவரால் பொலிஸாருக்குத் தேவையற்ற நெருக்கடி ஏற்படுவதாகவும் பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். ஆதாரமில்லாமல் இப்படிப் பேசிக்கொண்டிருப்பதை அனுமதிக்க முடியாது எனக் கண்டிப்பாகக் குறிப்பிட்ட நீதவான், அர்ச்சுனாவுக்கு வழங்கப்பட்ட 4 தவணைகளிலும் ஆதாரங்களை முன்வைக்கவில்லையென்பதை குறிப்பிட்டு, அவருக்கு எதிரான குற்றப்பத்திரிகையை அடுத்த 14 நாட்களுக்குள் சமர்ப்பிக்க சாவகச்சேரி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை, இந்த வழக்கில் அர்ச்சுனாவுக்கு பிணை கையெழுத்திட்ட 3 பேரும் வழக்கு நடந்து கொண்டிருந்தபோது கையை உயர்த்தினர். அவர்களின் கருத்தை நீதவான் கேட்டபோது, அர்ச்சுனாவுக்குப் பிணை கையெழுத்திட்டதிலிருந்து விலகுவதாகத் தெரிவித்தனர். இதனை அர்ச்சுனாவிடம் தெரிவித்தீர்களா? என அவர்களிடம் நீதவான் வினவினார். இல்லையெனப் பதிலளித்த அவர்கள், இந்த விவரத்தை அர்ச்சுனாவிடம் முன்னரே கூறினால் அவர் நீதிமன்றத்துக்கு வருவதைத் தவிர்த்து விடுவார் என்ற அச்சத்தில் குறிப்பிடவில்லை என்றனர். வழக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் பிணையாளிகள் மூவரையும் மன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டதுடன், 3 புதிய பிணையாளிகளை அழைத்து வருமாறு மருத்துவர் அர்ச்சுனாவுக்கு உத்தரவிடப்பட்டது. (ம-7)








































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்து...

நோக்கி புறப்பட்ட அரச பேருந்து நேற்று பிற்பகல் வேளையில் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் தரித்து நின்ற வேளையில் குறித்த பேருந்தின் நடத்துனர் மீது வவுனியா - கொழும்பு பயணிக்கும் தனியார் பேருந்தின் சாரதி ஒருவர் தாக்குதலை மேற்கொண்டதில் அரச பேருந்தின் நடத்துனர் காயமடைந்த நிலையில் வவுனியா பொதுவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்

நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை குறித்த சம்பவத்தினை தொடர்ந்து அதே தனியார் பேருந்தில் பணிபுரிந்த நபர் ஒருவர் வாளுடன் புதிய பேருந்து நிலையத்திற்கு வருகை தந்து அப்பகுதியில் இருந்த அரச பேருந்து ஊழியர்கள் மீது தாக்குதலை நடத்தியதில் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளதாக அரச பேருந்து ஊழியர்கள் தெரிவிக்கின்றனர் , இது தொடர்பாக பொலிஸ் முறைப்பாடும் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான CCTV காணொளிகள் பேருந்து நிலையத்தில் காணப்படுவதுடன் இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ம-7)

## கொள்கை...

கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

இந்த மோசமான அரசியல் சூதாட்டத்தை நிறுத்த வேண்டும். இலங்கை அரசியலில் இதுவரை என்ன நடந்தது? தேர்தல் வரும்போது அங்கும் இங்கும் கட்சி தாவுகிறார்கள். இதில் என்ன அரசியல் இருக்கிறது? இது போன்ற இவ்வளவு அசிங்கமான, வெட்கக்கேடான அரசியல் வேறெங்கும் இல்லை. சஜித்தின் மேடையிலும், ரணிலின் மேடையிலும் என்ன நடக்கிறது என்று பாருங்கள். கொள்கை ரீதியாக இருப்பது தேசிய மக்கள் சக்தி மட்டுமே, யார் நல்லவர், யார் கெட்டவர் என்பதை மட்டும் தேர்ந்தெடுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள், செப்ரெம்பர் 21 அன்று நாங்கள் வெற்றி பெறுவோம் என்றார். (ம-7)

# 'திருடர்களைப் பிடிப்போம்' என்ற கோசங்கள் செல்லுபடியாகாது

## ஜனாதிபதி ரணில்

(அநுராதபுரம்)

"திருடர்களைப் பிடிப்போம்" போன்ற பழைய அரசியல் கோசங்கள் இன்று நாட்டுக்கு செல்லுபடியாகாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று (11) நடைபெற்ற அநுராதபுரம் மாவட்ட தொழில் வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோர்களுடனான சந்திப்பின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலத்தைத் தீர்மானிக்கக் கூடிய இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு வேட்பாளரும் நாட்டை முன்னேற்றும் தனது உண்மையான பொருளாதாரக் கொள்கையை நாட்டிற்கு முன்வைக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் தமது எதிர்காலத்தைக் கோஷமிடும் தலைவர்களிடம் ஒப்படைக்கக் கூடாது என வலியுறுத்திய ஜனாதிபதி, புத்தர் கூறியது போன்று தமது எதிர்காலத்தைப் பாதிக்கும் விடயங்கள் குறித்து தர்க்க ரீதியாக நோக்கி புத்திசாலித்தனமாக ஆராய்ந்து செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்

"பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் நாடு நாசமடையும். ரஜரட்ட ராஜ்ஜியம் பலம் வாய்ந்ததாக இருந்தது. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததால் அந்த இராஜ்ஜியம் வீழ்ந்தது. 2022 இல் அதேநிலை ஏற்பட்டது. மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டது.

நான் தேடிச் செல்லவில்லை. யாரும் இல்லாததால் எனக்குப் பொறுப்பேற்கச் சொன்னார்கள். பொருளாதாரம் இன்றேல் நாட்டில் அரசியல் எதிர்காலம் ஒன்று இருக்காது என்றார். (ம-7)

## சா.த மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்கு

சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதி அவர்களின் ஏற்பாட்டில் க.பொ.த சாதாரண மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

இலவசக் கருத்தரங்கானது கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமைய தலைவர் வே. தேவசேனாதிபதி, கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமைய பொதுச் செயலாளர், மாங்குளம் தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரி மாகாண இணைப்பாளர் கந்தசாமி சக்திதரன் மற்றும் இளைப்பாறிய பிரதி முகாமைளார் வே.சுந்தரேஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

சனிக்கிழமை(14.09) மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பி.ப 2 மணிவரை கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்திலும் திங்கட்கிழமை(16.09) காலை 8 மணி தொடக்கம் 2.00 மணிவரை முல்லைத்தீவு ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபத்திலும் செவ்வாய்க்கிழமை(17.09) காலை 8 மணிமுதல் 2 மணிவரை மன்னார் நகர சபை மண்டபத்திலும் இவ் இலவசக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கா.பொ.த (சா/த) கடந்த கால வினா விடைத்தொகுப்புத்தகம்மற்றும்கையேடுகள் இலவசமாக வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ம-7)


A/L - 2024 மாணவர்களுக்கான...
" புவியியல் கருத்தரங்கு "
ஆசிரியர் - N.BABU
●16.09.2024 ●13.10.2024
●17.09.2024 ●14.10.2024
( ஆரம்பம் - 16.09.2024 திங்கள் : 8.00 am)
⇨ புதிய, வெளி மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
⇨ எதிர்பார்க்கை வினாக்கள் ஆராயப்படும்.
⇨ கையேடுகள் வழங்கப்படும்.
T.P - 077 936 5087
DMI
ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.



Assistant Accountant Vacancy
■ Exceptional skill in Accounting Software System
■ Exceptional skill in Book keeping
■ Minimum 2 years Experience in the industry
■ Age limit & Gender :- Seeking for a female over 21 age
■ Salary will be Negotiated.
If you are interested, please send your CV within 03 days to the following email address.
(mkpfeed2021@gmail.com)
No.09, Urumpirai Boundary Road, Palali Road, Kondavil, Jaffna.
T.P: 021 221 5565
077 664 7904



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1170) 076 825 7716 (ஆகாஸ்)



Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - வீசா சேவைகள்.
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1169)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322



V2 VISA SERVICES
கனடா Visit Visas
077 77 20 322
077 77 19 322
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்திய Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1169)



பதவி வெற்றிடம்
• அலுவலகச் செய்தியாளர்கள்
(உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
• முகாமைத்துவ உதவியாளர்கள்
(உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
• பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (பகல் கடமை)
(சாதாரண தரம் கற்றிருத்தல், பெண்கள்)
பொருத்தமானவர்கள் நேரில் அல்லது 076 097 3121 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.



விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தித் தரப்படும்.
1%
● Visit visa
● Student visa
● Fixed & saving
● லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு:
(1908)
075 033 6759



இந்தியன் விசா சேவைகள்
ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
(335)
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)



வீடு விற்பனைக்கு
கொக்குவில் ஞானபண்டித பாடசாலைக்கு அருகில் செல்லும் வீதியிலுள்ள மாதா சிலைக்கு அருகில் 2 பரப்பு காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு;
(1905)
076 742 4301,075 710 9639


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org